


# மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம்

## நூற்றாண்டு விழா சிறப்பு மலர்


## 1922 - 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் |
| ஆசிரியர் | : | செபரெத்தினம் அருள்ராசா SLAS (Special) |
| உரிமை | : | ஆசிரியருக்கே |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2023 |
| பதிப்பு விபரம் | : | முதற்பதிப்பு |
| மொத்த பக்கம் | : | 60 |
| நூலின் விலை | : | 350/- |
| அச்சிட்டோர் | : | எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட், மட்டக்களப்பு. |
| வெளியிட்டோர் | : | பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழா சிறப்பு மலர்

**அதிபர்**
திருமதி.தவமணிதேவி குணசேகரம்

**பிரதி அதிபர்**
திரு. ஏ. சோதீஸ்வரன்

# மலர்க்குழு உறுப்பினர்கள்

திரு. க.குணசேகரம் - உ.க.பணிப்பாளர்
திரு. ஏ.சோதீஸ்வரன் - பிரதி அதிபர்
திரு. க.குககுமாரராஜா - ஆசிரியர்
திரு. கா.சச்சிதானந்தம் - ஆசிரியர்
திரு. ஜெ.சுதேஸ்கரன் - அபிவிருத்தி உத்தியோகத்தர்

**பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்**
திருமதி. ஆனந்தி பிரசாந்

**பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர்**
திரு. ஜெ. சுதேஸ்கரன் (D.O)

**இதழாசிரியர்**
திரு. எஸ். அருள்ராசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுடவாசகம்

"கற்று ஆய்ந்து ஒழுகு"

## தூர நோக்கு

எதிர்கால சமூக, விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார
சவால்களை எதிர்கொள்ளும் மனோபலமுள்ள மாண்புறு சமூகம்.

## பணிக்கூற்று

பாடசாலையிலிருந்தும், சமூகத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளக்கூடிய வளங்களையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தி முறைசார் முறைசாரா கல்விச் செயற்பாட்டின் மூலம் அறிவாற்றல் ஆளுமைத்தேர்ச்சிகள் மிக்க, ஆன்மீக பலம் கொண்ட மாணவர் குழாத்தினை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

வாழ்க சரஸ்வதி வித்தியாலயம் - பயில்
மாணவர் வளமுடன் வாழியவே - (2)

வாணி அருள்தர மனமது மகழ்வுற
வளர்கலை யாவையும் பயின்றிடுவோமே...!

வாழ்க சரஸ்வதி வித்தியாலயம் - பயில்
மாணவர் வளமுடன் வாழியவே - (2)

மடமைகள் அகல்வோம் மதியுடன் வளர்வோம்...!
மாநிலம் மதித்திட வாழ்ந்திடுவோமே - (2)

வாழ்க சரஸ்வதி வித்தியாலயம் - பயில்
மாணவர் வளமுடன் வாழியவே - (2)

ஆழ்க தீயன அறிவொளி பெருகிட ....!
ஆசிரியர் அக மகிழ்வடைய ......! (2)
அவருரை கடவோம் அனுதினம் பயில்வோம்...!
ஆகும் நல்லறிவொளி பெறுவோமே....! (2)

வாழ்க சரஸ்வதி வித்தியாலயம் - பயில்
மாணவனர வளமுடன் வாழியவே - (2)

மாணவர் வளமுடன் வாழியவே...! (2)

(கவிஞர்.க.கந்தப்பெருமாள் ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....


- வாழ்த்துச் செய்தி - வலயக்கல்வி பணிப்பாளர் திரு.சிவானந்தம் சிறீதரன்
- வாழ்த்துச் செய்தி - அதிபர் - திருமதி.த.குணசேகரம்
- வாழ்த்துச் செய்தி -பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்
- திருமதி.ஆனந்தி பிரசாந்
- வாழ்த்துச் செய்தி - பழைய மாணவர் சங்க செயலாளர்
- - ஜெ.சுதேஸ்கரன்
- நூலாசிரியரிடமிருந்து - எஸ். அருள்ராசா
- பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

1. பாடசாலை அமைவிடம்
2. பாடசாலையின் தோற்றம்
3. மெதடிஸ்த மிசன் பாடசாலை
4. றோமன் கத்தோலிக்க பாடசாலை
5. பதிவு செய்யப்பட்ட பாடசாலையாக மாற்றம் பெறல்
6. கல்வி சுற்றுலா
7. உபவட்டார விளையாட்டு விழா
8. தமிழ் தின போட்டி
9. புதிய கட்டிடம் அமைப்பு
10. சரஸ்வதி வித்தியாலயமாக மாறல்
11. சுறாவளிக்குப் பின்னர்
12. இலவச புத்தக விழா
13. பாடசாலை வாரமும், சமய வாரமும்
14. இடைநிலை வகுப்புக்கள் ஆரம்பம்
15. புதிய மைதானம் அமைப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. மரநடுகை வாரம்

17. க.பொ.த சா/தரம் ஆரம்பம்

18. நூலக கட்டிடம் திறப்பு

19. சாரணர் இயக்கம்

20. சிறுவர் நேய பாடசாலை

21. க.பொ.த உ/தரம் ஆரம்பம்

22. மாடிக்கட்டிடம் அமைப்பு

23. விஞ்ஞான ஆய்வு கூடம்

24. சாதனையாளர்கள் கௌரவிப்பு

25. மைதான புனரமைப்பும் இல்ல விளையாட்டுப் போட்டியும்

26. நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் அமைப்பு

27. பௌதிக வள உதவிகள்

28. க.பொ.த சா/தர அடைவு முன்னேற்றம்

29. க.பொ.த உ/தர அடைவு முன்னேற்றம்

30. புலமைப்பரிசில் பரீட்சை

31. பாடசாலையின் கல்வி வளர்ச்சிப் போக்கு

32. இணைப்புகள்

  1. கடமையாற்றிய அதிபர்கள் விபரம்
  2. உசாத்துணை நூல்கள்
  3. நூற்றாண்டு அபிவிருத்திப் பணிகள் விபரம்
  4. உள்வாரி/வெளிவாரி பட்டதாரி மாணவர்களின் விபரம்
  5. பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்கள் / பழைய மாணவர் சங்க செயலாளர்கள் விபரம்
  6. ஆசிரியர்கள் விபரம்

புகைப்படங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**வலயக்கல்விப் பணிப்பாளரிடமிருந்து**

மட்/பட்/மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம் 1922ம் ஆண்டு றோ.க.த.கலவன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு இன்று சரஸ்வதி மகா வித்தியாலயமாக திகழ்கின்றது. இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பட்டிருப்பு கல்வி வலயத்தில் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள இப்பாடசாலை பல்துறை சார்ந்த சான்றோர்களை உருவாக்கியுள்ளது. ஆரம்ப, இடைநிலை வகுப்புக்களில் கல்வி கற்று வெளியூர்ப் பாடசாலைகளில் உயர்தரம் கற்று தேறிய பின் பல்கலைக்கழக கல்வியை முடித்துக்கொண்ட பலர் நிர்வாகத் துறையிலும் கல்வித்துறையிலும் உயர் பதவிகளில் பணியாற்றுகின்றனர். இவர்கள் யாவரும் உருவாக இப்பாடசாலை அடித்தளமிட்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது.

இன்று இப்பாடசாலையானது க.பொ.த(உ/த) வரை வளர்ச்சியடைந்துள்ளது. மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் திறமைகளை வெளிக்காட்டி வருகின்றமை பாராட்டுக்குரியது. இப்பாடசாலையின் கடந்தகால நிகழ்வுகளில் இருந்து இவை புலனாகின்றது. நூற்றாண்டு விழா காணும் மட்/மாங்காடு சரஸ்வதி மகாவித்தியாலயம் மேலும் பல சாதனைகளைப் புரிவதோடு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா/த) பரீட்சை, க.பொ.த(உ/த) பரீட்சைகளிலும் சித்தி வீதத்தை அதிகரிப்பரதன் மூலம் மேலும் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறே ஏனைய இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முழுமையாக ஈடுபட்டு மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர வேண்டுமென வாழ்த்துகின்றேன். பாடசாலைச் சமூகம், பழைய மாணவர்களுடன் ஒன்றிணைந்து ஒழுங்கமைத்த நூற்றாண்டு விழா மேலும் சிறப்படைய உளமார வாழ்த்துகின்றேன்.

**திரு.சிவானந்தம் சிறீதரன்**

*வலயக்கல்விப் பணிப்பாளர்*

*பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



### பாடசாலை அதிபரிடமிருந்து

பட்டிருப்பு கல்வி வலயத்தின் மட்டக்களப்பு, கல்முனை பிரதான வீதியில் அமைந்திருக்கும் நூற்றாண்டுகள் கடந்த ஒரு பாடசாலையாக எமது மட்/பட்/மாங்காடு சரஸ்வதி ம.வி உள்ளது. 1922.05.22ம் திகதி மாங்காடு R.C.T.M.S என்ற பெயருடன் ஆரம்பமான எமது பாடசாலை இன்று மட்/பட்/மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம் என்ற பெயருடன் தரம் 1 தொடக்கம் 13 வரை வகுப்புகளைக் கொண்டு 1C தரப் பாடசாலையாக விளங்குகின்றது.

ஆரம்பத்தில் ஓலைக் கட்டடம் ஒன்றுடன் ஆரம்பமான இப்பாடசாலை காலப்போக்கில் வளர்ச்சியுற்று இன்று மாடிக் கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடம், நூலகம் எனப் பல கட்டடங்களையும் கொண்டுள்ளது. படிப்படியாக மாணவர் சேர்விலும் உயர்ந்து வந்துள்ளது. அதே போல பௌதீக வளங்கள், மனித வளங்களைப் பெற்று க.பொ.த (சா/த), க.பொ.த(உ/த) பல சாதனைகளை ஏற்படுத்தி உயர்தரம் மூலம் பல மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பியுள்ளது.

தொடர்ந்து புலமைப்பரிசில் பரீட்சையில் பல மாணவர்களைச் சித்தியடையச் செய்ததுடன் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தேசிய மட்டம் வரை சாதனை படைத்துள்ளது. குறிப்பாக தமிழ் மொழி தினப்போட்டி, விளையாட்டுப்போட்டிகளில் பல மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் வெற்றிகளை பெற்று சாதனைபடைத்துள்ளது.

பல சாதனைகளையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வரும் இப்பாடசாலை எதிர்காலத்திலும், கல்வியிலும், இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் ஏனைய பலதுறைகளிலும் சிறந்து விளங்க என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி.தவமணிதேவி குணசேகரம்**
*அதிபர்*
*மட்/பட்/மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம்*


Digitized by Noolaham Foundation.

# வாழ்த்துச் செய்தி



**அபிவிருத்தி சங்க செயலாளரிடமிருந்து**

இயற்கை வளங்களால் சூழப்பட்ட மட்டக்களப்பு மாநகரத்தின் மாங்காடு எனும் அழகிய கிராமத்தின் பிரதான வீதியில் எழில்மிகு பாடசாலையாக விளங்குகிறது மட்/மாங்காடு சரஸ்வதி மகாவித்தியாலயமாகும். இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவிற்காக பாடசாலை சம்பந்தமான சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படுவதையிட்டு நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன்.

எமது பாடசாலை நூற்றாண்டு விழாக் காணும் இவ்வேளை எண்ணிலடங்கா மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றியுள்ளது. அதேவேளை மேலும் சாதனையாளர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது. எனவே இதற்காக பாரிய முயற்சி எடுத்து இம்மலரை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இம்மலருக்கு அனுசரணை வழங்கிய அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் பாடசாலை தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரை கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டப்படவேண்டியவர்களாவர். மேலும் இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக மட்டுமல்ல அதனோடிணைந்த இப்பாடசாலையின். அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டிய பழைய மாணவர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கின்றேன். இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சிபெற வாழ்த்துகின்றேன்.

**திருமதி.ஆனந்தி பிரசாந்**
*பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்*
*மட்/மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம்*

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு
நட்பு (திருக்குறள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**பழைய மாணவர் சங்க செயலாளரிடமிருந்து**

இந்து சமுத்திரத்தின் சிவபூமி என அழைக்கப்படும் இலங்கைத் தீவின் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு கல்வி வலயத்தின் சிறப்பு மிக்க பழம்பெரும் பாடசாலையாக காணப்படும் மட்/மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு மலருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்தவகையில் நவீன உலகில் இன்று விஞ்ஞானம் மாபெரும் வளர்ச்சி பெற்று வெவ்வேறு வகையில் பரிணமிப்பு செய்கின்றது. அதற்கேற்ப மனிதர்களும் மாறிய வண்ணமே உள்ளனர். இந்நிலையில் எதிர்கால தேவைகள் கருதி தம்மை தயார்படுத்தும் பொருட்டு நேரமின்றி இயந்திரமாக மனித குலம் தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதற்கு பாடசாலை செல்வங்களை புதிய பாதையில் மிக சிறப்பாக வடிவமைத்து உலகில் பரிணமிக்கச் செய்யும் அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் கடந்த நூற்றாண்டு கால கட்டங்களில் எமது பாடசாலையில் கற்று சரித்திரம் படைத்த மாணவர்களுக்கும் எதிர்காலத்தில் சரித்திரம் படைக்க காத்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கும் இந்நூற்றாண்டு விழா மலர் வெளியீடு ஊடாக வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூற்றாண்டு விழாக் காணும் இப்பாடசாலையின் வரலாற்றை ஓர் மலராக தொகுத்து வழங்கும் செ.அருள்ராசா சேர் அவர்களுக்கு விசேடமாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு ஒரு இனம் தனித்துவத்தை பேணுவதற்கு வரலாறு முக்கியமான சான்றாகும். அவ்வாறே நூற்றாண்டு காலமாக தடம்பதித்த எமது பாடசாலைக்கு மணிமகுடமாகவும் நினைவுச் சுடராகவும் திகழும் இம் மலர் வெளியீடு வரலாற்று பொக்கிசமாக திகழும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**“எதிர்கால சமூகத்தின் கண்கள் மாணவர்கள் என்றால் அவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தும் பாடசாலை அறிவின் கண்களாகும்”.**

**ஜெ.சுதேஸ்கரன்**
*அபிவிருத்தி உத்தியோகத்தரும்*
*மட்/பட்/மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயம்*
*பழைய மாணவ சங்க செயலாளரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரிடமிருந்து ...



மாங்காடு கிராமத்தின் கல்வி பொக்கிசமாக திகழ்ந்து வரும் "சரஸ்வதி மகா வித்தியாலயத்தின்" வரலாறு பற்றி, இப்பாடசாலையின் நூற்றாண்டு விழாவையொட்டி இம்மலரை தொகுத்து வழங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா சம்பந்தமாக வெளியிடப்படும் இம்மலரில், இப்பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி, கல்வி முன்னேற்றம், விசேட வைபவங்கள், அதிபர்கள் ஆசிரியர்களின் விபரங்கள், மாணவர்களின் திறமைகள், பாடசாலையின் கட்டட வளர்ச்சி, பாடசாலையின் அபிவிருத்தி ஏனைய கல்வியுடன் தொடர்புடைய விடயங்கள், இப்பாடசாலைக்கு கிடைக்கப்பெற்ற உதவிகள் உட்பட பாடசாலையின் தற்போதய நிலைமை சம்பந்தமாகவும், இம் மலரில் பதிவு செய்ய கிடைத்தமையிட்டு இப்பாடசாலையின் ஆரம்ப கால மாணவன் என்ற வகையில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

இப்பாடசாலை சம்பந்தமாக மலர் ஒன்று வெளியிட வேண்டுமென்ற அவா 2010ம் ஆண்டுகளிலேயே நான் ம.தெ.எ. பற்று பிரதேச செயலாளராக இருந்தபோது என்மனதில் உருவானது. இப்பாடசாலை பற்றி மாத்திரம் மட்டுமல்ல "மாங்காடு கிராமத்தின் தோற்றமும் வளர்ச்சியும்" பற்றி 2010ம் ஆண்டு ஏப் – யூன் மாத தென்றல் எனும் பல்சுவை குடும்ப சஞ்சிகை மலரில் முதன்முதலாக எழுதியிருந்தேன். மேலும் "அபிவிருத்திப் பாதையில் மாங்காடு" எனும் தலைப்பில் காலஞ்சென்ற திருமதி. பொன்னம்மா செபரெத்தினம் அவர்களின் 31ம் நாள் நினைவு மலர், 2015ம் ஆண்டு வெளியிடப்பட்ட போது இக் கிராம வரலாறு பற்றி குறிப்பிட்ட அதேவேளை "சரஸ்வதி மகா வித்தியாலயம்" பற்றியும் சுருக்கமாக எழுதக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

மேலும் 01.05.2022ல் இப்பாடசாலையின் நூற்றாண்டு ஆரம்ப தினத்தை முன்னிட்டு, பத்திரிகைகளிலும், முகநூலிலும் இப்பாடசாலை சம்பந்தமாக சுருக்கமான வரலாற்றை மேலோட்டமாக எழுதக் கிடைத்தமை பெரும் பாக்கியம் என்றே கருதுகின்றேன். இப்பாடசாலையின் ஆரம்ப வரலாறு சம்பந்தமாக பாடசாலையின் LOG BOOK (இருப்பு புத்தகம்) உட்பட ஏனைய ஆவணங்களின் உதவியுடனும், பிரதேச செயலகம், பிரதேச சபை, மாவட்ட செயலகம், கிராமங்கள், கோயில்கள் மற்றும் பாடசாலைகளின் வரலாறு உட்பட அரச



Digitized by Noolaham Foundation.

திணைக்களங்களிலிருந்தும் கிடைக்கப் பெற்ற தகவல்களைக் கொண்டும் எழுதக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. முக்கியமாக மாங்காடு கிராம பிரமுகர்களின் நேரடி வாக்குமூலங்கள், மரபு வழி தகவல்கள் மிகவும் உதவியாக அமைந்திருந்தமை குறிப்பிட்டு சொல்லவேண்டியதொன்றாகும். முக்கியமாக க.முருகேசு, S.குமரப்போடி, A.காளியம்மை, க.பொன்னம்மா, த.மனோன்மணி, மு.காசுபதி, T.பூரணம்மா, K.தவமணி, M.நாகமணி (கி.உ.,) V.கணபதிப்பிள்ளை, S.லிங்கராசா, வ.வேலாயுதம் போன்றவர்களிடமிருந்து இக் கிராமத்தின் ஆரம்ப வரலாற்று தகவல்களை பெறக்கூடியதாயிருந்தது. இம்மூத்த பிரமுகர்கள் பலர் தற்போது உயிருடனில்லை என்பது இக்கிராமத்திற்கு பாரிய இழப்பாகும்.

மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் வரலாறு பற்றி இந்நூற்றாண்டு விழா கொண்டாடப்படும் இக்காலகட்டத்தில் இவ்விசேட மலரை வெளியிடவேண்டுமென்ற பல நலன்விரும்பிகளின் வேண்டுகோளை ஏற்று, இம்மலரை எழுதி, வெளியிட சந்தர்ப்பம் கிடைத்தமை பெரும் வரப்பிரசாம் என கருதுகின்றேன். ஏற்கனவே சுருக்கமாக எழுதிய அனுபவத்தைக் கொண்டு இன்னும் பல உசாத்துணை நூல்களின் உதவியுடனும், இக் கிராம பிரமுகர்களின் ஆலோசனைகள் மற்றும் உதவிகளின் அடிப்படையிலும் இம்மலரை வெளியிட முடிந்தமையிட்டு சந்தோசமடைகின்றேன்.

எனவே இம்மலர் வெளியிடப்படுவதன் மூலம் இப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் உட்பட எதிர்கால சந்ததியினருக்கும் பயனுள்ளதாக அமையுமென்று நம்புகிறேன். அத்துடன் இப்பாடசாலையை பற்றி அதன் வரலாறு பற்றி அறிந்திருப்பதன் மூலம் மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு இம்மலரில் குறிப்பிடப்படும் தகவல்கள் உறுதுணையாக அமையும் என்றால் மிகையாகாது.

இம்மலரை வெளியிட எனக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர் திருமதி. தவமணிதேவி குணசேகரம், பிரதி அதிபர் ஏ.சோதீஸ்வரன் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இம்மலரை வரைய எழுத்துமூல ஆவணங்களையும் ஆலோசனையையும் வழங்கிய க.குணசேகரம் உதவி கல்விப் பணிப்பாளர் அவர்கட்கும், க.சுந்தரலிங்கம் உதவி கல்விப்பணிப்பாளர் அவர்கட்கும், கிராம உத்தியோகத்தர் I.ஜனேந்திரன் அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இப்பாடசாலை பற்றிய பல தகவல்களையும் வழங்கிய K.சச்சிதானந்தம் (ஆசிரியர்), கி.மேகலாதன் (கி.அ.ச தலைவர்), A. அன்னலெட்சுமி (ஆசிரியர்),


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெ.சுதேஸ்கரன் (D.O), கு.தனுபிரசாந்த், S.நடராசா (முன்னாள் ஆலய தலைவர்), S.நாராயணபிள்ளை, இ.லூர்த் அனுசியா (ஆசிரியை), N.டிலக்ஷன் (கட்டார்) M.ராஜ்மோகன், T.லவகுமார் (கி.உ), P.சுந்தரராஜா (தாய்லாந்து), T.சந்திரசேகரம், S.நித்தியகலா (ஆசிரியை) முதலியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் பழைய மாணவர்களின் பங்களிப்பும் மற்றும் இப்பாடசாலைக்கு அவர்கள் செய்து வரும் உதவிகளும் பெரும் உறுதுணையாக அமைகிறது. இவர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்ல முடியாமைக்கு மனம் வருந்துகின்றேன். மேலும் 1950ம் ஆண்டுக்கு முற்பட்ட தகவல்களை பெற்றுக் கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்ததென்பதையும் சொல்லியாக வேண்டும். க.கந்தப்பெருமாள் காலஞ்சென்ற ஆசிரியர் அவர்களின் சில எழுத்துமூல ஆவணங்களும், ஊர் பிரமுகர்களின் மரபுவழி கதைகளும் பெரும் உதவியாக அமைந்திருந்தமை குறிப்பிட்டு சொல்ல கூடியவை.

மேலும் இம்மலரை வெளியிட நிதி உதவி மட்டுமல்ல சகல வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த K.குககுமாரராஜா (ஆசிரியர்) அவர்கட்கும், நிதி உதவி புரிந்த T.இராமச்சந்திரன் (சுவிட்சலாந்து) மற்றும் இ.மாசிலாமணி அவர்களுக்கும் இந்த இடத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். இறுதியாக ஆலோசனை வழங்கி உதவிய மலர்குழ உறுப்பினர்கள், ஆலயங்கள் மற்றும் சகல சங்கங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் உட்பட இக்கிராம பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எஸ். அருள்ராசா**

*(பாடசாலை பழைய மாணவனும்,*

*இலங்கை நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற சிரேஷ்ட அதிகாரியும்,*

*தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளரும்.)*

❖❖

**எவனொருவன் என்னை வெட்டுகின்றானோ**
**அவனுக்கே, எனது இறுதி நிழலை நான்**
**கொடுப்பேன்.**

**இப்படிக்கு**
**மரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

## 01) பாடசாலையின் அமைவிடம்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மத்தியில் வங்காள விரிகுடாவின் மேற்கு கரையில் மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. இயற்கையின் எழில் பூத்துக் குலுங்கும், பசுந்தமிழ் கொஞ்சி விளையாடும் மட்டு மாநகரின் தென்கோடியில் 21 கிலோமீற்றர் தூரத்தில் மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் ஆன்மீகச் சூழலும், கிராமிய கலாசார, பண்பாடும் ஒருங்கே அமைந்த பழம்பெரும் கிராமமான மாங்காடு கிராமம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலக பிரிவுகளில் ம.தெ.எ. பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 45 கிராம சேவையாளர் பிரிவுகளில் மாங்காடு இல. 123 கிராமமும் ஒன்று. இக்கிராமம் வன்னியார் பிரிவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து ம.தெ.எ.பற்று பிரிவில் உள்ள 15 முக்கியமான கிராமங்களில் ஒன்றாக திகழ்கின்றது.

### சனத்தொகை விபரம் - மாங்காடு

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொ.உறுப்பினர்கள் | மொ.குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| 1981 | 506 | 494 | 1000 | 282 |
| 2009 | 1009 | 1037 | 2046 | 520 |
| 2022 | 1144 | 1136 | 2280 | 695 |

இக்கிராமத்தின் மத்தியில் பிரதான வீதிக்கு மேற்கு புறமாக அமைந்துள்ள இரு முக்கியமான பழைமை வாய்ந்த இடங்களான பாடசாலை, மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் என்பன மாங்காடு கிராமத்தின் ஆரம்பகால பிரதான இடங்களாக கருதப்பட்டு வருகின்றன. இக் கிராமம் வடக்கே செட்டிபாளையம் கிராமத்தையும், தெற்கே தேற்றாத்தீவு கிராமத்தையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும் மேற்கே மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டு அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 20' உயரத்தில் அமைந்துள்ள இக்கிராமத்தில் 1907ம் ஆண்டுக்கு முன்னர் 15 குடும்பங்களே வாழ்ந்து வந்துள்ளதாக புள்ளி விபரங்களின் படி அறிய முடிகிறது. இச் சிறிய கிராமத்தில் 1981ம் ஆண்டின் முதலாவது குடிசன மதிப்பீட்டின் படி 506 ஆண்களும், 494 பெண்களுமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தம் 1000 பேர் இக்கிராமத்தில் வசித்து வந்துள்ளனர். 2009ம் ஆண்டு புள்ளி விபரங்களின்படி 520 குடும்பங்களுடன் 2046 பேர் மொத்த சனத்தொகையாக காணப்பட்ட அதேவேளை, 2022ம் ஆண்டில் குடிசன மதிப்பீட்டின்படி 695 குடும்பங்களை சேர்ந்த 2280 உறுப்பினர்களில் 1144 ஆண்களும், 1136 பெண்களும் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இக்கிராமத்தில் வாக்காளர் எண்ணிக்கை 2022ம் ஆண்டில் 1544 பேராகவும், சமுர்த்தி முத்திரை பெறுபவர்கள் 403 குடும்பங்களாகவும் காணப்படுகின்றனர்.

1875ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது ஓர் தற்காலிக திண்ணைப்பள்ளியாகவே காணப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் பிரதான போக்குவரத்து இன்மையினால் பாடசாலைக்கு கால்நடையாகவே பல அயல் கிராம மாணவர்கள் பலரும் வந்து கல்வி கற்றுள்ளனர். 1922 / 1923ம் ஆண்டுகளில் கல்லடி கறுத்த பாலம் வில்லியம் மெனிங் என்னும் ஆளுநரால் கட்டி முடிக்கப்பட்ட பின்பே இக் கிராமத்திலுள்ள பாடசாலை மாத்திரமல்ல கல்முனை – மட்டக்களப்பு பிரதான வீதியிலுள்ள பல கிராமங்களும், பாடசாலைகளும் வளர்ச்சியடைந்தன. தனது மனைவியின் நினைவாக கட்டப்பட்ட இப்பாலத்திற்கு அருகிலுள்ள வீதி தற்போதும் "லேடி மெனிங்" என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

## 02) பாடசாலையின் தோற்றம்

இப்பாடசாலை 1922.05.01 இல் முறைப்படி பதிவு செய்யப்பட்டு 01.05.2022ம் திகதியன்று 100 வருடங்கள் பூர்த்தியடையும் நிலையில் நூற்றாண்டு விழா காண்பதையிட்டு அன்று தொடக்கம் இன்று வரை இப்பாடசாலயையில் கல்விபயின்ற அனைத்து மாணவர்களும் இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் பெருமிதம் அடைகின்றனர்.

இப்பாடசாலையின் ஆரம்பகால வரலாற்றை பற்றி பார்க்கின்றபோது 1875ம் ஆண்டளவில் தற்போது பாடசாலை அமைந்துள்ள அதே இடத்தில் முதன்முதலில் ஓர் ஓலைக் குடிசையில் 2 றூட் பரப்பளவில் காணப்பட்ட ஓர் அரச காணியில் இவ் ஆரம்ப பாடசாலை அமையப் பெற்றுள்ளமையைஅறியக் கூடியதாக உள்ளது. அதாவது ஆங்கிலேயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையை முழுமையாக கைப்பற்றிய 1815ம் ஆண்டுக்குப் பின்பு, சேர் எட்வேட் பாங் என்பவர் தேசாதிபதியாக இருந்த காலத்தில் கல்முனை – மட்டக்களப்பு வீதியின் மேற்கு புறமாகவும், ஆற்றங்கரைக்கு அருகில் காணப்பட்ட தீவுக்காட்டிலுமாக மொத்தம் 15 குடும்பங்கள் வரையில் இக்கிராமத்தில் வாழ்ந்து வந்துள்ளனர். இக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே இங்கு கல்வி கற்றுள்ளமையை அறிய முடிகிறது.

## 03) மெதடிஸ்த மிசன் பாடசாலை

இப்பாடசாலை ஊரின் மத்தியிலும் பிரதான வீதியின் அருகிலும் அமைந்திருந்தமை காரணமாக இக்கிராமத்தை சேர்ந்த மாணவர்களும் அயல் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு கல்வி கற்றுள்ளமையை அறிய முடிகிறது. முதன் முதலில் கிறிஸ்தவ வேத பாடம் மட்டுமே போதிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நான்கு (04) மாணவர்களே காணப்பட்டுள்ளனர். இக் காலத்தில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் சட்டம்பிமார் (பள்ளித் தலைவன்) என அழைக்கப்பட்டனர். இப் பாடசாலை இப்பிரதேசத்தின் ஆரம்பகால பாடசாலையாக காணப்பட்டமையால், அயல் கிராமங்களிலுமிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்று வந்துள்ளனர். அக் காலத்தில் பனை ஓலையில் எழுத்தாணியினால் எழுதும் பழக்கமே காணப்பட்டுள்ளது. இப் பாடசாலை மெதடிஸ்த மிசனறிமாரின் கட்டுப்பாட்டில் இருந்தமையால், இது மெதடிஸ்த மிஷன் பாடசாலையாக காணப்பட்டுள்ளது. இப்பாடசாலை இப்பிரதேசத்தின் சிறந்த பாடசாலையாக காணப்பட்டுள்ளதுடன் 5ம் ஆண்டு வரை வகுப்புக்களும் நடைபெற்றுள்ளது.

மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் ஆரம்பகால வரலாற்றை எடுத்து நோக்கும்போது, இப்பாடசாலை ஆரம்பத்தில் மெதடிஸ்தமிசன் பாடசாலையாகவே காணப்பட்டுள்ளது. 1871ம் ஆண்டு ஜோன் கில்னர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மெதடிஸ்த மிசன் கல்வி கமிட்டியின் தீர்மானத்துக்கு அமைவாக மட்டக்களப்பு (அம்பாறை உட்பட) மாவட்டத்தில் பரவலாக பல பாடசாலைகள் மெதடிஸ்த மிசனரிமார்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கல்விக்கு பொறுப்பாக இருந்த பெஞ்சமின் கிளவ் என்னும் பாதிரியாரால் இப்பகுதியில் பல பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது மாங்காடு மெதடிஸ்த மிசன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதை, அயல் கிராமங்களின் வரலாற்று ஆய்வு நூல்களையும், மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மெதடிஸ்தமிசன் தேவாயலங்களின் வரலாற்றையும் அடிப்படையாக கொண்டு உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. அதே வேளை அப்போது கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பாகவிருந்த அரச அதிபர் W.W.கியூம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இப்பகுதி பாடசாலைகளை ஆரம்பித்து வைத்ததாக வரலாற்று ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது. ஆனால் எமது பாடசாலையிலிருந்து மேற்படி தகவல்களை உறுதிப்படுத்த போதிய ஆதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டவேண்டும். இதன்போது ஓர் ஆசிரியருடன் 04 மாணவர்களே கல்வி கற்று வந்துள்ளதை ஆரம்பகால பதிவேடுகளிலிருந்து தெரிய வருகிறது. மேலும் 1876ல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக தற்காலிக கொட்டகை சேதமடைந்ததோடு, அவை மீண்டும் திருத்தியமைக்கப்பட்டு பாதிரிமார்களால் தொடர்ச்சியாக கல்வி கற்பிக்கப்பட்டு வந்துள்ளமையை அறியமுடிகிறது.

## 04) றோமன் கத்தோலிக்க பாடசாலை

கத்தோலிக்க முதல் தமிழ் துறவியாகிய வணபிதா பிரான்சிஷ் சேவியர் அவர்களின் வழிகாட்டலின்கீழ், கல்வித்துறையில் ஆர்வம் கொண்ட ஆயர் கிறிஸ்தோபர் பொஞ்சீன் OMI அவர்களின் முயற்சியினால் கிழக்கு மாகாணத்தில் பல கத்தோலிக்க பாடசாலைகள் 1850 - 1900 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலகட்டங்களில் ஆரம்பிக்கப்பட்ட அதேவேளை, பல மெதடிஸ்த மிசன் பாடசாலைகளும் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைகளாக மாற்றம் பெற்றதை, மட்டக்களப்பு மாவட்ட ஆரம்பகால கத்தோலிக்க பாடசாலைகளின் வரலாற்று நூல்களிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் 1896ம் ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் 03 (மூன்று) அரசாங்க பாடசாலைகளே காணப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகள் தனியார் வெஸ்லியன் மிசன் பாடசாலைகளாகவும் மற்றும் வர்ணகுல (Vernacular School) போன்ற பாடசாலைகளே காணப்பட்டதை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி நூற்றாண்டு விழா புத்தகத்திலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. எனவே இதுவரை காலமும் "மெதடிஸ்த மிசன்" பாடசாலையாக காணப்பட்ட மாங்காடு பாடசாலை கத்தோலிக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிரிமாரின் வருகையின் பின்னர் "றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன்" பாடசாலையாக மாற்றம் பெற்றது. 1912ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் காணப்பட்ட 72 பாடசாலைகளில் மாங்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும் ஒன்று என்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. அதே வேளை 1913ல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக இப்பாடசாலை சேதமடைந்திருந்த போதிலும், கத்தோலிக்க பாதிரிமாரின் உதவியுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளதையும் அறிய முடிகிறது. இக் காலகட்டங்களில் ஜோசப் ஏபிரகாம்,ஜோசப்வல்லிபுரம், அருளப்பு போன்ற ஆசிரியர்கள் இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ளனர். 1920ம் ஆண்டு காலகட்டங்களில் இரு ஆசிரியர்களுடன் 28 மாணவர்கள் கல்வி கற்று வந்துள்ளனர். அதே வேளை 1920களில் கிராம தலைவராக இருந்த (ஊர் விதானையார்) முண்டாப்போடி அவர்களின் சேவை, இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தமையை காணக்கூடியதாக உள்ளது. மேலும் தேற்றாத்தீவு, செட்டிபாளையம் போன்ற அயல் கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் மாங்காடு றோ.க.த.கலவன் பாடசாலையில் கல்வி கற்றுள்ளமையை அறியக் கூடியதாக உள்ளது.

1950ம் ஆண்டு காலகட்டத்தில் கத்தோலிக்க மிசன் குருமாரின் சேவை இப்பிரதேசத்தில் பரவலாக காணப்பட்டதனால் கத்தோலிக்க பாதிரிமார்கள் மூலம் கத்தோலிக்க மதம் பரவலாக வேரூன்ற ஆரம்பித்தது. 1961ம் ஆண்டு கத்தோலிக்க தேவாலயமும் ஊரின் எல்லையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் காரணமாக கத்தோலிக்க மதத்தினை சிலர் தழுவிக் கொண்டனர். கத்தோலிக்க மதகுருமாரின் சேவைகள் மக்களுக்கு கூடுதலாக கிடைக்கப்பெற்ற இக்கால கட்டத்தில் பல கிராமங்களில் பாடசாலை கட்டிடங்களையும் உருவாக்கி கத்தோலிக்க மதமும், கல்வியும் பாதிரிமார்களால் போதிக்கப்பட்டன. தேற்றாத்தீவு மாங்காடு யூதாதேயு ஆலயம் ஆரம்பத்தில் கல்லாறு பங்குடன் இருந்த காலத்தில் 1950ம் ஆண்டுக்கு முன்பிருந்து 1960 வரை மாங்காடு, தேற்றாத்தீவு கத்தோலிக்க பாடசாலைகளில் மாதமொருமுறை திருப்பலி நிறைவேற்றப்பட்டு வந்துள்ளது.

1930களில் ஓலைக் குடிசை இருந்த இடத்தில் நீற்று கட்டடம் ஒன்று கல்லால் 60' X 20' நீள அகலமுடையதாக 1200 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டது. மெதடிஸ்த மிஷன் பாடசாலையாக இருந்த இப்பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டது. இக்கால கட்டத்தில் மெதடிஸ்த மிசனறிமாரின் சேவை முடிவுறுத்தப்பட்டு கத்தோலிக்க மிசனரிகளின் சேவை பல கிராமங்களுக்கும் கிடைத்தது. இதன் காரணமாக பலர் பாடசாலைக் கல்வியை விரும்பி கற்கலாயினர். இதன் பின்னர் படிப்படியாக சகல பாடங்களும் கற்பிக்கப்பட்டு 05ம் ஆண்டு வரை நடாத்தப்பட்டுள்ளதை அறியக் கூடியதாக உள்ளது. இக் காலகட்டத்தில் கத்தோலிக்க மிசனறிமாரின் சேவைக்கு போட்டியாக, இராமகிருஷ்ணமிசன் பாடசாலைகள் இப்பிரதேசங்களில் உருவாக்கப்பட்டு இந்து மதத்தின் வளர்ச்சி பரவலாக காணப்பட்ட போதிலும் இப்பாடசாலை மட்டும் தொடர்ந்தும் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையாகவே காணப்பட்டு வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

## 05) பதிவு செய்யப்பட்ட பாடசாலையாக மாற்றம் பெறல்

இப்பாடசாலை 1922.05.01 ல் BT/439ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டு 1961ம் ஆண்டு வரை கல்முனை வட்டார பிரிவின் கீழ் இயங்கி வந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்டதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட கல்வி வலயத்தின் வித்தியாபதியின் கீழ் நேரடியாக கொண்டு வரப்பட்டது. அத்துடன் கத்தோலிக்க பாடசாலையான இப்பாடசாலையும் அரசுயமையாக்கப் பட்டது. 1950ம் ஆண்டுக்கு முன்னர் சூசைப்பிள்ளை, செபமாலை வீரகத்தி தங்கராசா முதலானோர் அதிபர்களாக கடமையாற்றியுள்ளார்கள். 1950ம் ஆண்டுக்கு பின்னர் அதிபராக ஆபிரகாம் என்பவர் கடமையாற்றியுள்ள மையை அறிய முடிகிறது. அதன்போது 34 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று வந்துள்ளமையை அறிய முடிவதோடு இப்பாடசாலையில், 05ம் வகுப்பு வரை காணப்பட்டுள்ளமை யும் அவதானிக்க முடிகிறது.

1930களில் நீற்றுக் கட்டடமாக காணப்பட்ட இப்பாடசாலையின் ஒரே ஒரு கட்டடமானது 1940 களில் சீமேந்திலான கட்டடமாக மாற்றப்பட்டது. 60' X 20' நீள அகலமுடைய இக்கட்டடம் 1200 சதுர அடி பரப்புள்ளதாக காணப்பட்டது. இக் கட்டடம் 168 அடி நீளமும் 121 அடி அகலமுடைய சிறிய காணிப் பரப்பில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதே நேரம் தற்போதுள்ள முன்வாசலுக்கு நேரே காணப்படும் இக்கட்டடத்தின் தென்மேற்கு மூலையில் கிணறு ஒன்று இக்காலகட்டத்தில் கட்டப்பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கியமையும் குறிப்பிடத்தக்கது. தற்போது இக் கிணறு முற்றாக மூடப்பட்டுள்ளது.

## 06) கல்விச் சுற்றுலா

1956ம் ஆண்டளவில் அதிபராக கதிர்காமர் கடமையாற்றியுள்ள அதேவேளையில் உதவி ஆசிரியர்களாக K.வேலாயுதம், P.விநாயகமூர்த்தி உட்பட 4 ஆசிரியர்கள் கடமையாற்றியுள்ளமையை அறியக்கூடியதாக உள்ளது. மேலும் இதன்போது 105 மாணவர்களுடன் 05ம் வகுப்பு வரை பாடசாலை நடத்தப்பட்டு வந்துள்ளது. முதன் முதலாக ஆங்கில ஆசிரியர் வார்தலோமுஸ் என்பவர் 1956.06.16 முதல் கடமையாற்றியமை அறிய முடிகிறது.

மேலும் 1960களில் அப்போது காணப்பட்ட கல் கட்டடத்திற்கு அருகாக வடக்கு தெற்காக ஓலைக் கட்டடமொன்று அமைக்கப்பட்டது. இதன்போது 7ம் வகுப்பு வரையும் நடத்தப்பட்டு வந்துள்ளமையை அறியக் கூடியதாக உள்ளது. மாணவர்கள் தொகை 1961ல் 130 ஆக அதிகரித்த அதே வேளை தொடர்ந்தும் 4 ஆசிரியர்களே கடமையாற்றியுள்ளனர். த.பூரணம்மா, ப.சிவகுரு ஆசிரியர்கள் உட்பட 4 ஆசிரியர்கள் தொடர்ந்தும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களின் தொகை அதிகரிப்புக்கேற்ப பாடசாலை கட்டட தேவையும் காணப்பட்ட அதே வேளை 16.06.1959 களில் மாணவர்களுக்காக பாடசாலை வளவின் தென்மேற்கு மூலையில் மலசலகூடம் கட்டப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்டது. 1963ல் தலைமை ஆசிரியராக ப.சோமசுந்தரம் கடமையாற்றிய வேளை முதன் முதலாக கல்வி சுற்றுலா நான்கு நாட்களுக்கு இடம்பெற்றுள்ளது. 40 மாணவர்களுடன் திருமதி.அ.தம்பிப்பிள்ளை ஆசிரியை தலைமையில் இரண்டு ஆசிரியர்களும் இச் சுற்றுலாவில் கலந்து கொண்டு அனுராதபுரம், பொலன்நறுவை, திருகோணமலை முதலிய இடங்களுக்கு சென்றுவந்துள்ளமையை குறிப்பேடுகளிலிருந்து அறிய முடிகிறது. மேலும் பாடசாவை மாணவர்கள் அருகிலுள்ள மாணிக்கப்பிள்ளையார் கோயிலுக்கு வெள்ளிக்கிழமை காலையில் வாரந்தோறும் சென்று கூட்டுப்பிராத்தனையில் ஈடுபடுவது வழக்கமாக இருந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07) உபவட்டார விளையாட்டு விழா

1964ம் ஆண்டளவில் கோ. ஜோசப் தலைமை அதிபராக இருந்த போது 8ம் வகுப்பு வரையும் வகுப்புகள் நடாத்தப்பட்டுள்ளன. இப்பாடசாலையில் 167 மாணவர்களும் 06 ஆசிரியர்களும் காணப்பட்டுள்ளனர். இதன் போது திருமதி. S.அந்தோனி, S.சின்னத்துரை, வி.குழந்தைவேல் ஆசிரியர்களும் கடமையாற்றியுள்ளனர்.

மேலும் 1968 களில் தலைமை ஆசிரியராக கல்லாறு க.இராசமாணிக்கம் அதிபர் அவர்கள் பதவி ஏற்றவுடன் பாடசாலை மாணவர்களின் விளையாட்டுக்களுக்கு ஊக்கம் கொடுக்கப்பட்டது. இதன்போது ஊரின் மேற்கு பகுதியில் காணப்பட்ட குளம் விளையாட்டு மைதானமாக பயன்படுத்தப்பட்டது. மேலும் க.இராசமாணிக்கம் அவர்களது காலப்பகுதியில் பாடசாலை கட்டடத் திருத்தமும் நடைபெற்றுள்ளது. இதன்போது N.சிறிபத்மநாதன், S.மயில்வாகனம் ஆசிரியர்களும் கடமையாற்றியுள்ளனர். மேலும் இப்பாடசாலையில் இக்காலகட்டங்களில் சத்துணவாக பாலும், பணிஸ்சும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

1970களில் மாங்காடு வெட்டுக்காட்டுப் பகுதியில், பிரதான வீதிக்கு அருகிலுள்ள காணியில் உபவட்டார விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. களுதாவளை தொடக்கம் குருக்கள்மடம் வரையுள்ள பாடசாலை மாணவ, மாணவிகள் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் S.இரத்தினசிங்கம், S.லிங்கராசா ஆகியோர் பல விளையாட்டுக்களில் சிறந்து விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

**பொது**

I. மேலும் 31.07.1971ல் தலைமை ஆசிரியராக S.சிவஞானம் அவர்கள் பாடசாலை பொறுப்பை ஏற்றார். அதேவேளை உதவி ஆசிரியராக க.வேலாயுதம் உட்பட 6 ஆசிரியர்களும் 184 மாணவர்களும் இருந்துள்ளனர். 1973 களில் மீண்டும் பழைய கல்லாலான பாடசாலைக் கட்டடம் திருத்தி அமைக்கப்பட்டது. இதற்காக 394.35 சதம் செலவிடப்பட்டுள்ளது. இதன்போது மாணிக்கபிள்ளையார் ஆலயத்திற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பாகவுள்ள கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் தற்காலிகமாக பாடசாலை நடாத்தப்பட்டது. க.வேலாயுதம் ஆசிரியர் அவர்கள் 1956ல் மாங்காடு கிராமத்தின் முதல் உதவி ஆசிரியராக தெரிவுசெய்யப்பட்டு கடமையாற்றியுள்ளமை அறிய முடிகிறது. அதேவேளை T.பூரணம்மா ஆசிரியை அவர்கள் 1961 முதல் இவ்வூரின் இரண்டாவது ஆசிரியையாக தெரிவு செய்யப்பட்டு இப்பாடசாலையில் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. மேலும் இக்காலகட்டத்தில் திருமதி செபமாலைமேரி, மயில்வாகனம் (குருக்கள் மடம்), திருமதி. பரமேஸ்வரி மயில்வாகனம் (குருக்கள் மடம்), திரு. கணபதிப்பிள்ளை ஆசிரியர்களும் கடமையாற்றியுள்ளனர்.

II. மேலும் கல்வித்துறை அதிகாரிகளால் மாணவர்களிடையே புலமைப்பரிசில் போட்டி ஒன்று இப்பாடசாலையில் நடைபெற்றது. இதில் தமிழ் பாடத்தில் S.அருள்ராசா மற்றும் கணிதத்தில் S.குணம் ஆகிய இரு மாணவர்கள் சித்தி பெற்று பரிசில்களும் வழங்கப்பட்டன. அதே போன்று02.02.1972ம் ஆண்டுகளில் P.கந்தசாமி தலைமை ஆசிரியராக இருந்த போது புலமைப்பரிசில் பரீட்சைக்கு பல மாணவர்கள் தோற்றி பரிசில்களும் பெற்றிருந்தமை குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதொன்றாகும்.

III. மேலும் 14.09.1972ல் மாணிக்கப்பிள்ளையார் கோவிலுக்குப் பின்னால் உள்ள ஊரின் உள் வீதியில் நாட்டுக்கூத்து, சதங்கையணி, விநாயகர் திருமணச் சடங்கு நடைபெற்ற போது பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டு சில மாணவர்கள் கலை விழாவில் கலந்து சிறப்பித்தமையும் முக்கிய அம்சமாகும். மேலும் கணேச கல்யாண நாட்டுக்கூத்தும் கூட்டுறவுச்சங்க முகாமையாளராக இருந்த கந்தையாவினால் கூட்டுறவு கடைக்கு முன்னால் உள்ள வளவில் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவை பாடசாலை Log Book இலிருந்து பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 08) தமிழ்த்தினப் போட்டி

18.06.1973ம் திகதி முதன்முதலாக தமிழ்த்தினப் போட்டி இப்பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது 4ம் வகுப்பில் க.யோகம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.மாசிலாமணி, செ.புஸ்பராசாவும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டதோடு வட்டார மற்றும் மாவட்ட மட்டத்திற்கும் சென்று பங்குபற்றினர். மேலும் 5ம் வகுப்பில் த.இன்பராசா, செ.சுந்தரராசா, து.துரைரெட்ணராசாவும் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை 8ம் வகுப்பில் தா.லோகேஸ்வரி, செ.யோசப் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களும் பெற்றுக் கொண்டனர். இதன்போது அதிபராக K.கந்தையா கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பாடசாலை மாணவர்களுக்கு இக்காலகட்டங்களில் சத்துணவாக பிஸ்கட் வழங்கப்பட்டது குறிப்பித்தக்கது.

## 09) புதிய கட்டிடம் அமைப்பு

21.09.1976ம் திகதி இப்பாடசாலையில் 220 மாணவர்களுடன் 07 ஆசிரியர்களும் காணப்பட்டுள்ளனர். இதன்போது மாணவர் கலாமன்றம் இப்பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. மாணவர்கள் ஒன்றிணைந்து பாடத்திட்டத்திற்கேற்ப கதை, நடனம், அபிநயப் பாட்டு, பேச்சு முதலியவற்றை திறம்படச் செய்து காட்டினார்கள்.

மேலும் ஒரே ஒரு நீற்று கட்டடத்திலும் மற்றும் ஓர் தற்காலிக ஓலைக் கட்டடத்திலும் 08ம் வகுப்பு வரை இயங்கி வந்த இப்பாடசாலைக்கு, புதிய கட்டடம் ஒன்று கிடைக்கப்பெற்றது. 05.04.1976ல் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. பழைய கட்டடத்திற்கு வடக்கு பக்கமாக பழைய நீற்று கட்டடத்திற்கு சமாந்தரமாக 90 X 20 அடி சதுர நீள அகலத்தில் 1800 அடி சதுர பரப்பளவில் புதிதாக அமைக்கப்பட்டது.

அத்துடன் 08.09.1976ம் திகதி இப் புதிய கட்டட திறப்பு விழா K.கந்தையா அதிபர் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இத் திறப்பு விழாவிற்கு மாவட்ட கல்வி திணைக்களத்தில் இருந்து கல்விப் பணிப்பாளர் சற்குணராசா உட்பட முக்கியமான அதிதிகள் கலந்துகொண்டனர். இக் கட்டடம் அமைக்கப்பெற்ற காணியானது செல்லத்துரை குடும்பத்தினரிடமிருந்து அரசால் சுவீகரிக்கப்பட்டு இக்கட்டடம் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதாவது தெற்கு பக்கமாக உள்ள பழைய கட்டட காணியின் அதே பரப்புடையதாக 02 றூட் அளவில் இக்காணியின் விஸ்தீரணம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.வேலாயுதம் ஆசிரியர் அவர்கள் இக்காணியை பெறுவதற்கு ஆர்வத்துடன் செயற்பட்ட ஒருவராவார்.

## 10) சரஸ்வதி வித்தியாலயமாக மாறல்

26.07.1978ம் திகதி பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கி.மு. சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்ட பெற்றோர் ஆசிரியர்கள் சங்க கூட்டம் பாடசாலையில் நடைபெற்றது. இக்கூட்டம் தலைமை ஆசிரியர் ஏ.காசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றுள்ளது. பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளராக பா. செபரெத்தினம் கடமையாற்றியுள்ளார். இதன்போது சைவ மாணவர்கள் கூடுதலாக இப்பாடசாலையில் கல்வி பயில்வதனால் இதுவரையும் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையாக இருந்த இப்பாடசாலையின் பெயர் “சரஸ்வதி வித்தியாலயம்” என மாற்றியமைப்பதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 1896 முதல் 1978 வரையான சுமார் 82 ஆண்டுகளுக்கு மேல் இப்பாடசாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையாக இயங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 11) சூறாவளிக்குப் பின்னர்

23.11.1978ம் திகதி தென்கிழக்கு ஆசிய நாடுகளை தாக்கிய பெரும் சூறாவளியினால் கிழக்கு மாகாணமும் முற்றாக செயலிழந்தது. இதன்போது இப்பாடசாலையின் நிரந்தர மற்றும் ஓலைக் கட்டிடங்கள் சேதமடைந்தன. ஓலைக் கட்டிடம் முற்றாக சேதமடைந்த அதேவேளை கல்லாலான இரண்டு பாடசாலை கட்டிடங்களும் பகுதி அளவில் சேதமடைந்திருந்தன. இதன் காரணமாக பாடசாலை நடத்த முடியாத நிலைமை காணப்பட்டது. நிரந்தர கட்டிடத்தின் ஓடுகள் விழுந்து சேதடைந்திருந்தன. இதன்போது பாடசாலையில் பல தளபாடங்கள் சேதமடைந்திருந்ததோடு சில தளபாடங்கள் பாடசாலை நடைபெறாது என கருதி பொது மக்களால் வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. தளபாடங்கள் காணாமல் போயிருந்தமை சம்பந்தமாக அப்போதிருந்த அதிபர் ஏ.காசுபதிப்பிள்ளையினால் மாங்காடு கிராம உத்தியோகத்தராயிருந்த M.நாகமணி அவர்களிடத்தில் 26.11.1978ல் ஓர் முறைப்பாட்டை செய்திருந்தார். இதன் பின்னர் எடுத்துச் செல்லப்பட்ட தளபாடங்கள் மீண்டும் பொதுமக்களால் பாடசாலையின் நன்மைகருதி தானாகவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையளிக்கப்பட்டன. இதன்போது சம்பவ திரட்டு புத்தகம், தினவரவு இடாப்புக்கள் போன்ற முக்கிய ஆவணங்கள் க.குணசேகரம் அவர்களினால் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு அதிபர் ஏ.தியாகராசாவின் வீட்டில் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பாடசாலையின் வளவில் இருந்த 2 முதிரை மரங்கள், 4 தென்னை மரங்கள், ஒரு பனைமரமும் முறிந்து விழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 06.01.1979ல் சூறாவளியினால் சேதமுற்ற தற்காலிக ஓலைக் கட்டடம் பொதுமக்களின் உதவியுடனும் அரச உதவியுடனும் தென்னை மரம் மற்றும் தென்னை ஓலைகளால் மீண்டும் கட்டப்பட்டு பாடசாலை ஆரம்பமானது. மேலும் 06.03.1979ல் சேதமடைந்த கட்டடத்தின் கிழக்குப்புற அறை மட்டும் திருத்தியமைக்கப்பட்டு அதிபர் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டு வந்தது. சேதமடைந்த கட்டடத்திற்கு பதிலாக புதிய கட்டடம் புதிய அத்திவாரத்தில் போடப்பட்டு உறுதியானதாக கட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனை அடுத்து 01.10.1979ல் சரஸ்வதி பூசை சிறப்பாக இப்பாடசாலையில் நடைபெற்றது. சூறாவளி அடித்து ஓராண்டு நிறைவு தினமாகிய 23.11.1979ல் சிறு கடை வியாபாரி வைரமுத்து செட்டியார் அவர்களால் பாடசாலை மாணவர்களுக்கு பாலும் தேநீரும் இலவசமாக வழங்கப்பட்டது. இதன்போது தற்காலிக அதிபராக ஏ.தியாகராசா கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் கந்தப்பெருமாள் ஆசிரியரின் சகோதரி சின்னப்பிள்ளை ஆசிரியையின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 12) இலவச புத்தக விழா

18.01.1980ல் தேசிய பேரவை உறுப்பினர் பூ. கணேசலிங்கம் அவர்களால் அரசாங்கத்தின் இலவச புத்தக விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உ.அ. அதிபர். க. தங்கராசா, பிரதம கல்வி அதிகாரி எஸ். மனோகரன் உட்பட கிராம உத்தியோகத்தர், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டார்கள். மேலும் 27.03.1980ல் ஏ.சுப்பிரமணியம் அதிபராக இருந்த போது வருடாந்த விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டிக்கு அதிதிகளாக உ.அ. அதிபர், பாராளுமன்ற உறுப்பினர், கல்வி அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தார்கள்.

மேலும் 1981ம் ஆண்டு இலவச புத்தக விநியோகம் இப்பாடசாலயில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. இவ் வைபவத்தின் போது ஆண் தாதி க.கணபதிப்பிள்ளை அவர்கள் தென்னங்கன்றுகளை நாட்டி வைத்தமை சிறப்பம்சம் ஆகும். இதன்போது 225 மாணவர்களும் 08 ஆசிரியர்களும் இப்பாடசாலையில் காணப்பட்டுள்ளனர். மேலும் 27.06.1982ல் இப்பாடசாலையில் முதன்முதலாக கைப்பணி கண்காட்சி அதிபர் ஏ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற போது எஸ்.மனோகரன் CEO அவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

1978 சூறாவளியின் பின்னர் கட்டட சேதம் காரணமாகவும், ஆசிரியர் பற்றாக்குறை காரணமாகவும், மாணவர்களின் வரவு குறைவாக காணப்பட்டதன் காரணமாக 5ம் வகுப்பு வரை மட்டுமே நடாத்தப்பட்டு வந்துள்ளது. இதன்பின்னர் மீண்டும் 1983ல் ஆறாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு 1984ல் 7ம் வகுப்பு என, 1985ல் எட்டாம் வகுப்பு என ஒவ்வொரு வருடமும் வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டு பாடசாலை நடத்தப்பட்டு வந்துள்ளது. மேலும் 06.07.1983ம் திகதி இப்பாடசாலையில் மாயாஜால காட்சி காண்பிக்கப்பட்டது சிறப்பம்சம். மேலும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக தொண்டர் ஆசிரியர்களாக க.சுந்தரலிங்கம் அ.அன்னலெட்சுமி, பொ.துரைராசா ஆகியோர் இதன்போது கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 13) பாடசாலை வாரமும், சமய வாரமும்

30.01.1984ம் திகதி பாடசாலை வாரம் இப்பாடசாலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கல்வி அதிகாரி க. இராசநாயம், கிராம உத்தியோகத்தர் க. சுந்தரலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் இதன்போது 5ம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச புத்தக விநியோகமும் நடைபெற்றது. இப்பாடசாலை வாரத்தின் போது பூக்கன்றுகள் மற்றும் தென்னம்பிள்ளை போன்றன நடப்பட்டதுடன் பாடசாலையின் வேலியும் திருத்தியமைக்கப்பட்டது. மேலும் சிரமதான பணியின்போது பழைய மாணவர்கள், பெற்றோரக்ள், பொதுமக்கள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள். 13.02.1986ம் திகதிய கணிப்பீட்டின்படி 243 மாணவர்களுடன் 7 ஆசிரியர்களும் 4 தொண்டர் ஆசிரியர்களுமாக 11 ஆசிரியர்கள் கடமையாற்றினார்கள். மேலும் மாங்காடு கிராமத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது கிராமோதய சபை தலைவராக க.கந்தப்பெருமாள் 1983களில் கடமையாற்றினார் அதேவேளை 25.11.1986ம் திகதியன்று இப்பாடசாலைக்கு மாங்காடு கிரோமோதய சபையினரால் "ரேப் ரெக்கோடர்" ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இவ் வைபவத்திற்கு தலைமையக உ.அ.அதிபர் சடாச்சர சண்முகதாஸ் அவர்களும் மற்றும் ம.தெ.எ.பற்று உ.அ.அதிபர் R.நாகலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். இதன்போது K.பாக்கியராஜா கிராமோதய சபை தலைவராக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

08.09.1987ம் திகதி நடைபெற்ற சமய வாரத்தின் போது மாணிக்கப்பிள்ளையார் ஆலய சமய நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாடுடைய க. கந்தப்பெருமாள் ஆசிரியர் அவர்கள் அன்பு, சமத்துவம், சமய அனுஷ்டானம் பற்றி மாணவர்களுக்கு சமய சொற்பொழிவு ஒன்று ஆற்றினார்கள். இதன் மூலம் மாணவர்களின் சமய அறிவை பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் வெள்ளிக்கிழமை தோறும் மாணிக்கப்பிள்ளையார் கோயிலுக்கு பாடசாலை மாணவர்கள் செல்லும் வழக்கமும், கூட்டுப் பிரார்த்தனை செய்யும் முறைகளும் தொடர்ந்தும் நடைபெற வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

உலக தரிசன நிறுவனத்தின் (World Vision) உதவியின் கீழ் 23.02.1988ல் தலைவி S.திருமணி, செயலாளர் A.அன்னலெட்சுமி ஆகியோர் மூலமாக பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டன. இவ் உடைகள் (Uniform) 5ம் வகுப்பு வரை உள்ள மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் போது 5ம் வகுப்பு வரையுமே வகுப்புக்கள் நடைபெற்றமை அறிய முடிகிறது.

## 14) இடைநிலை வகுப்புக்கள் ஆரம்பம்

22.08.1988ல் ஆரம்ப ஆசிரியர்களாக க. குணசேகரம், இ. சிவயோகம் ஆகியோர் மாங்காடு கிராமத்தின் புதிய ஆசிரியர்களாக கடமை ஏற்றனர். இதன் பின்னர் 5ம் வகுப்பு வரை காணப்பட்ட இப்பாடசாலை 1989ல் ஆறாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது 228 மாணவர்கள் சமுகமளித்திருந்தனர். இவர்களுக்காக மதிய உணவாக சோறும் கறியும் 25.05.1989ம் திகதி வழங்கப்பட்டது. இவ் நிகழ்வின் போது வி.பேதுருசில்சா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.ஜெ.நவரெத்தினம், செல்வி.வே.கமலாதேவி, மற்றும் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தார்கள். திருமதி.பூ.தவராசா ஆசிரியை இந் நிகழ்வுக்கு நன்றியுரை வழங்கி நிகழ்வு இனிதாக நிறைவு செய்யப்பட்டது. மேலும் 30.05.1989ல் பாடசாலையில் கல்வி பொருட்காட்சியும் நடைபெற்றது.

27.02.1990ல் இல்ல விளையாட்டுப்போட்டி ஏ.சுப்பிரமணியம் அதிபர் தலைமையில் நடைபெற்றது. 07.05.1991ல் மாங்காடு பசுந்தளிர் மன்றத்தினால் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதன்போது க.குணசேகரம் ஆசிரியர் உரை நிகழ்த்தினார். 23.11.1991ல் பாடசாலை வளவு பழைய மாணவர்களால் சிரமதானம் செய்யப்பட்டது. இதன் பின்னர் 1990 களில் 7ம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதோடு, 1991ல் 8ம் வகுப்பு வரையும் மீண்டும் நடாத்தப்பட்டுள்ளது. இதன்போது 323 மாணவர்களுடன் 11 ஆசிரியர்கள் இப்பாடசாலையில் இருந்தமை காணக்கூடியதாகவுள்ளது. இதன் பின்னர் 1992ல் 9ம் வகுப்பும், 1993ல் 10ம் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக வகுப்புக்கள் நடத்தப்பட்டு வந்துள்ளமை பாடசாலை குறிப்பேடுகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

## 15) புதிய மைதானம் அமைப்பு

இவ்வளவு காலமும் இப்பாடசாலைக்கு மாத்திரமல்ல, இக்கிராம மக்களுக்கும் ஓர் மைதானம் இல்லாமலிருந்தமை பெரும் குறைபாடாக காணப்பட்டது. 1980 களிலிருந்து சிறிது சிறிதாக சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்ட இவ் அரச காணி மாங்காடு இந்து மயானத்திற்கு வடக்காக காணப்படுகின்றது. முதன் முதலாக 27.02.1990 களில் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. மாணவர்களின் உடற் பயிற்சியும், விளையாட்டுக்களும் நடாத்தப்பட்ட இவ் இல்ல விளையாட்டுப் போட்டியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பின்னர் இம் மைதானத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்கம், பொதுமக்கள், நலன் விரும்பிகள், விளையாட்டுக் கழகம், பிரதேச செயலகம், பிரதேச சபையின் உதவியுடன் மேலும் புனரமைக்கப்பட்டு 2010ம் ஆண்டு ம.தெ.எ. பற்று பிரதேச செயலக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு கழகங்களுக்கிடையிலான போட்டி பிரதேச செயலாளராக இருந்த S.அருள்ராசா அவர்களின் தலைமையில் இம் மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. பிரதேச சபை தவிசாளர், S.பாக்கியராசா சமுர்த்தி ஆணையாளர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்திருந்தார்கள். இதன் பின்னர் தொடர்ச்சியாக இளைஞர் விளையாட்டு கழகம், தேசிய இளைஞர் விளையாட்டு கழகம் முதலிய சங்கங்களினால் சித்திரை விளையாட்டுப் போட்டி வருடாந்தம் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## 16) மர நடுகை வாரம்

20.01.1990ன் முதல் வாரத்தின் நடத்தப்பட்ட மர நடுகை வாரத்தின் போது பாடசாலையில் மட்டுமல்ல, மாணவர்களின் வீடுகளிலும் மர நடுகை நடத்தப்பட்டது விசேட அம்சம். மாணவர்களான ம. நடேசன், கு. நிர்மலதாசன், வே. கலாவதன், நா. மயூரன், யே. ஜெயா ஆகியோர்களின் வீடுகளுக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் விசேடமாக சென்று மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

மேலும் இப்பாடசாலையில் நடைபெற்ற தமிழ்தின இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கொத்தணி மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டமை சிறப்பு நிகழ்வாகும். 1ம் பிரிவில் வாசிப்பு சி. தர்ஷினி, சொல்வதெழுதுதல் நா. உதயகுமாரியும், 2ம் பிரிவில் பா ஓதுதல் வே. உதயகலா, ஆக்கம் இ. லூர்த் அனுசியா, வாசிப்பு யூ.நடேசன் ஆகியோர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்போது அதிபராக திருமதி ம. தர்மரெட்ணம், உதவி ஆசிரியராக திருமதி. த.தவராசா கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. இக்காலகட்டத்தில் 323 மாணவர்களுடன் 12 ஆசிரியர்களுடனும் இப்பாடசாலை சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது.

## மேலதிக கட்டடம்

மேலும் 1991ம் ஆண்டில் இப்பாடசாலைக்கு புதிதாக ஓர் கட்டடம் கிடைக்கப் பெற்றது. இப்பாடசாலைக்காக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த இரண்டு கட்டடங்களுக்கு நடுவே உள்ள காணியில் 120' X 20' நீள அகலம் கொண்ட 2400 சதுர அடி பரப்புள்ள அதிபர் அலுவலகத்துடன் கூடிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடமாக அமையப் பெற்றது. 07.11.1991ல் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், திறப்பு விழா சம்பிரதாய பூர்வமாக அதிபர் திருமதி. ம.தருமரெட்ணம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கிராம உத்தியோகத்தர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். கல்வி அலுவலக அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தார்கள். இதன்போது இப்பாடசாலையில் 8ம் ஆண்டு வரை வகுப்புக்கள் நடைபெற்று வந்துள்ளமை அவதானிக்க முடிகிறது.

## 17) க.பொ.த சா/தரம் ஆரம்பம்

1992ம் ஆண்டு 9ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை 1993ம் ஆண்டு 10ம் ஆண்டு இப்பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான முயற்சியை அதிபராக இருந்த திருமதி. ம. தர்மரெட்ணம் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. க.பொ.த. சா/தரம் தோற்றுவதற்கான பாடங்களும் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் பின்னர் 22.03.1993ல் புதிய அதிபராக க.காளிக்குட்டி அதிபர் இப்பாடசாலையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இப்பாடசாலையில் இக்காலகட்டத்திலேயே கூடுதலான மாணவர்கள் அதாவது 423 மாணவர்களுடன் 18 ஆசிரியர்களும் காணப்பட்டுள்ளனர். இதன்போது 12.06.1993ம் திகதி தொடக்கம் 05 நாட்கள் அதிபர் தலைமையில் 47 மாணவர்களும் 07 ஆசிரியர்களும் கல்விச் சுற்றுலா சென்றுவந்தமை விசேட அம்சம். 1994ம் வருடம் 11ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அவ்வருடமே க.பொ.த. சா/த ர பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றியமை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்று. இந்த க.பொ.த. சா/தர பரீட்சைக்கு முன்னதாக இல்ல விளையாட்டுப் போட்டியும் பாரதி, விபுலானந்தர், நாவலர் என மூன்று இல்லங்களாக பிரிக்கப்பட்டு புதிய மைதானத்தில் நடத்தப்பட்டமை விசேட அம்சம் ஆகும்.

1994ம் ஆண்டு க.பொ.த. சா/தரத்தில் 20 மாணவர்கள் கல்வி கற்ற போதிலும் 09 மாணவர்கள் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றினார்கள். செ.நாராயணமூர்த்தி, ச. தவகுமார், பொ. மேகவண்ணன், கு. சதாகரன், ப. பத்மசீலன், இ. லூர்த் அனுசியா, அ. விஜயலெட்சுமி, ந. செல்வராணி, க. கோமதி ஆகியோர்களில் 5 பேர் அதாவது 60% மான மாணவர்கள் க.பொ.த. உ/தரம் செல்வதற்கான தகுதியை பெற்றிருந்தமை இப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கு பெருமை தேடித்தந்ததாக அமைந்திருந்தது. இம் மாணவர்களின் வெற்றிக்காக க. சிவமலர், ஜமுனாராணி, க. செல்வராசா, இ. சிவயோகம், சசிகலா, க. புனிதவதி, கமலாதேவி, தவமணி முதலான ஆசிரிய ஆசிரியைகள் ஆற்றிய பங்களிப்பு பாராட்டப்பட வேண்டும். முதல் தடவையாக க.பொ.த. சா/தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் சிலர் அரச தொழிலில் தற்போதும் கடமையாற்றி வருவது இப்பாடசாலைக்கு ஓர் சிறப்பம்சம் எனலாம்.

## 18) நூலக கட்டிடம் திறப்பு

நூலக கட்டட திறப்பு விழாவுக்கு முன்னதாக 08.02.1995ல் பாடசாலையின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரியர் செல்வராசா அவர்களினால் விசேட செயற்றிட்டத்தின் மூலம் தற்காலிக கட்டடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. இதன் பின்னர் 24.04.2000 ஆம் திகதியன்று நூலக கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் 15.03.1997 லேயே புதிய அதிபராக கடமை ஏற்ற க. கார்த்திகேசு அவர்களினால் இப்பாடசாலைக்கான வாசிகசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது அதி கூடுதலான 429 மாணவர்களும் 20 ஆசிரியர்களும் காணப்பட்டமை சிறப்பு அம்சமாகும். 27.07.2000ம் ஆண்டு க.கார்த்திகேசு ஓய்வுபெற்று சென்றதன் பின்னர் அதிபராக த.சுந்தரலிங்கம் கடமை ஏற்று நடத்தியமை அறிய முடிகிறது.

07.02.2001ந் திகதியன்று நூலக கட்டட திறப்பு விழா, அதிபர் க. தர்மலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இன விவகார தேசிய நல்லிணக்க கனிய வள பிரதி அமைச்சர் சோ. கணேசமூர்த்தி அவர்களினால் இவ்வாசிகசாலை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதன்போது க. இராசநாயகம் (வலய கல்விப் பணிப்பாளர்), வ. கணபதிப்பிள்ளை (பிரதி கல்விப் பணிப்பாளர்), க.குணசேகரம் (ஆசிரிய ஆலோசகர்) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர். இப்பாடசாலையின் பழைய மாணவர் வயிரமுத்து கணபதிப்பிள்ளை பி.க.பணிப்பாளராக பட்டிருப்பு கல்வி வலயத்தில் இருந்த காலத்தில் இவரது அயரா முயற்சி காரணமாக இந் நூலக கட்டடம் கிடைக்கப்பெற்றது. க. தர்மலிங்கம் (பிரதி அதிபர்) 16.02.2001 முதல் அதிபராக பதவி ஏற்றதும் 2001.10.22ல் நூலக தின விழா சிறப்பாக நடாத்தப்பட்டது. இதன்போது பிரதி கல்விப் பணிப்பாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். மனோகரன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார்கள். மேலும் இவ்வாசிகசாலைக்கு 2001ம் ஆண்டு உலக தரிசன நிறுவனத்தின் மூலமும், ஏசியா பவுண்டேசன் நிறுவனம் மூலமும் புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன. இதன் மூலம் பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கான அடித்தளம் இடப்பட்டது. 1989 கால கட்டத்தில் மாங்காடு வளர்மதி சனசமூக நிலைய வாசிகசாலைக்கு க.குணசேகரம் தலைவராக இருந்தபோது World vision நிறுவனத்தால் 3000/- பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டன. அதே வேளை RDS கட்டடத்திற்கு அருகில் உள்ள தற்காலிக கட்டடத்தை World vision பணிப்பாளர் வெரி என்பவர் திறந்து வைத்தார்.

மேலும் பாடசாலை மாணவர்களினதும், கிராமத்திலுள்ள ஏனைய மாணவர்களினதும் கல்வி மேம்பாட்டிற்காக மேலும் ஓர் வாசிகசாலை ம.தெ.எ. பற்று பிரதேச சபையின் தவிசாளராக இருந்த S.பாக்கியராசா (கண்ணன்) அவர்களின் முயற்சியினால் பிரதேச சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் இவ்வூரின் விஷ்ணு கோயிலுக்கு செல்லும் வீதியருகில் 2008ம் ஆண்டு அமைக்கப்பட்டது. பிரதேச சபை மூலமாக ஒருதொகை புத்கங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிப்பிடத்தக்கது.

மேற்கூறப்பட்ட வாசிகசாலைகள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருவதுடன். முதலில் பாலர் பாடசாலை ப.நோ.கூ சங்க கட்டிடத்திலேயே இயங்கியது. அதன் பின் RDS கட்டடத்திலும் மாதர் சங்க மூலம் நடாத்தப்பட்டது. அ.பரிமளம், சா.குணலெட்சுமி ஆசிரியைகள் கடமை புரிந்தனர். 1982களில் உலக தரிசன நிறுவனத்தின் மூலம் “பசுந்தளிர் பாலர் பாடசாலை” ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்ப கல்வியின் ஓர் அடித்தளமாக அமைந்திருந்தது. அ.பரிமளம் ஆசிரியர் அவர்கள் அன்று தொடக்கம் இன்று வரை ஆரம்ப பாலர் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தொண்டாற்றி வருவதை பாராட்டாமல் இருக்க முடியாது. இம்மாணவர்களின் அடிப்படை கல்வி தான் சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கு உறுதுணையாக அமைந்துள்ளது எனலாம். மேலும் 2009ல் இந்து கலாச்சார திணைக்களத்திலிருந்து 30 (முப்பது) புத்தகங்கள் அடங்கிய பொதியை க.குணசேகரம் அவர்கள் பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் கோ.கருணைநாயகத்திடம் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## 19) சாரணர் இயக்கம்

22.03.2002ம் திகதியன்று இப் பாடசாலையில் சாரணர் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரதி கல்வி பணிப்பாளர் S. மனோகரன், உதவி மாவட்ட சாரணம் ஆணையாளர் S. அலோசியஸ், சாரண இயக்கத்தில் பயிற்சியை பெற்ற மாணவர்கள் முதலானோர் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பித்திருந்தனர். க. தர்மலிங்கம் அதிபர் தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இம் மாணவர்களை கௌரவிக்குமுகமாக மறுநாள் அதாவது 23.03.2002ம் திகதியிலிருந்து கல்விச் சுற்றுலா 50 மாணவர்களுடன் சென்று வந்தமை முக்கியமான அம்சமாகும்.

இப்பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி, பொதுக் கல்வி சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் இப்பாடசாலைக்கு BIDRC 00079 இலக்க வர்ண தொலைக்காட்சி பெட்டியும், அன்ரனாவும் வழங்கி வைக்கப்பட்டன. இதைவிட சிறப்பம்சமாக இப்பாடசாலைக்கான முன்மதில் அமைப்பதற்கான அடிக்கல்லும் 08.05.2002ம் திகதி நாட்டப்பட்டு பின்னர் முடிவுறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் 09.01.2023ம் திகதியன்று 1ம் வகுப்பு மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தின் மூலம் பாடசாலைக் கல்வி உபகரணங்கள் அடங்கிய பை (Bag) வழங்கி வைக்கப்பட்டது. இம்மாணவர்கள் அனைவரும் தங்கள் ஆரம்ப கல்வியை தொடங்குவதற்கான நடவடிக்கைகளை அதிபர் உட்பட சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 20) சிறுவர்நேயப் பாடசாலை

"சுனாமியின் பின் மீண்டெழுவோம்" எனும் தலைப்பில் சித்திரப் போட்டி பாடசாலையில் நடைபெற்றது. இதில் குணசுந்தரம் ஜமுனா எனும் மாணவி சிரேஷ்ட பிரிவில் இப்போட்டியில் வெற்றிபெற்று தேசிய மட்டத்திற்கு விசேட பயிற்சிக்குரியவராக தெரிவு செய்யப்பட்டமை இப்பாடசாலைக்கு பெருமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ப்பதாக அமைந்தது. இவரை இப் போட்டிக்கு தயார்படுத்திய ஆசிரியை திருமதி. காந்திமதி ஜெயந்தன் அவர்கள் பாராட்டுக்குரியவர்.

மேலும் 2006ல் சிறுவர் நேய பாடசாலையாக, இப்பாடசாலையின் தரம், மாணவர்களின் வறுமை, பாடசாலையின் முன்னேற்றம் என்பவற்றின் மூலம் உள்ளீர்க்கப்பட்டது சிறப்பம்சம். சிறுவர் நேயப் பாடசாலையாக உள்ளீர்க்கப்பட்ட சிறப்பு தின நிகழ்வு 19.11.2007ல் மிகவும் சிறப்பாக இப்பாடசாலையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வின் போது பாடசாலை மாணவர்களால் தெருக்கூத்து, கண்காட்சி முதலிய சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

24.04.2008ல் புதிய அதிபராக K.கருணைநாயகம் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் பொறுப்பேற்றவுடன் 06.05.2008ல் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வுப் போட்டி சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக ம.தெ.எ. பற்று பிரதேச செயலாளரான எஸ். அருள்ராசா கலந்து சிறப்பித்திருந்தார். திருமதி. வே. குணநாயகம் கோட்டக் கல்விப் பணிப்பாளரும், S.பாக்கியராஜா பிரதேச சபை தவிசாளர், எஸ். மனோகரன் பி.கல்வி பணிப்பாளர்கள் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் 02.04.2009ந் திகதியிலிருந்து 4 நாட்கள் கல்விச் சுற்றுலா 48 மாணவர்களுடன் கண்டி, நுவரெலியா, கதிர்காமம் ஆகிய இடங்களுக்கு சென்றுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## 21) க.பொ.த உயர் தரம் ஆரம்பம்

இப்பாடசாலையில் க.பொ.த உயர் தரம் ஆரம்பிப்பதற்கான ஆரம்ப முயற்சி, அப்போது ம.தெ.எ. பற்று பிரதேச செயலாளராக கடமையாற்றிய எஸ். அருள்ராசாவினால் 27.04.2009ம் திகதியிடப்பட்ட DS/MS/EP/ED இலக்கமிடப்பட்ட கடிதம் மூலம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.கே.யு.கே. வீரவர்த்தனக்கு முகவரியிட்டு க.பொ.த. உயர் தரக் கலைப்பிரிவு ஆரம்பிப்பதற்கான அனுமதி கோரிக்கை அனுப்பப்பட்டது. அதே நேரம் பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க கௌரவ தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சரின் 06.05.2009, 12.10.2009


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதிகளிட்ட கடிதங்கள் மூலம் கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன் அவர்களினாலும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ R.துரைரெட்ணசிங்கம் அவர்களினாலும், கிழக்கு மாகாண கௌரவ முதலமைச்சரின் 25.05.2009 கடித மூலம் கௌரவ சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களாலும், கௌரவ மாகாணசபை உறுப்பினர் கௌரவ R.துரைரெட்ணம் அவர்களாலும் இப்பாடசாலையில் உயர்தர வகுப்பு ஆரம்பித்து வைக்குமாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. மேலும் பிரதேசசபை தவிசாளராக இருந்த S.பாக்கியராஜா அவர்கள் க.பொ.த (உ/த) ஆரம்பிப்பதற்காக பலவழிகளிலும் உதவி புரிந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் மாணிக்கப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபை, தலைவர் S.நடராசா இளைஞர் விளையாட்டுக் கழக தலைவர் கி.மேகலாதன், பாடசாலை அபிவிருத்தி சங்கம் முதலிய நிறுவனங்களினாலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்படி கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் செயலாளர் H.K.U.K. வீரவர்த்தன அவர்களின் 19.10.2009ம் திகதிய EP/3/PC/4PG/Sch இலக்க கடிதத்தின் பிரகாரம் இப்பாடசாலை 01.05.2009ம் திகதி முதல் செயற்படும் வண்ணம் க.பொ.த உயர்தர வகுப்பு கலைப்பிரிவு ஆரம்பிப்பதற்கான அனுமதியும், தரம் 1C பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கான அனுமதியும் கிடைக்கப்பெற்றன.

முறைப்படியாக 30.10.2009ம் திகதியன்று க.பொ.த உ/த கலைப்பிரிவு கோ. கருணாநாயகம் அதிபர் தலைமையில் இப்பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் S.மனோகரன் (பிரதி கல்விப் பணிப்பாளர்), திருமதி. குணநாயகம் (கோட்ட கல்விப் பணிப்பாளர்) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட போது பதினெட்டு மாணவர்களில் 16 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதன்போது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதன் போது 202 மாணவர்களும் 14 ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். க. சுரேஷ்காந், S.கிரிசாந்தகுமார், P.நவரஞ்சினி, K.விஜிதா, S.நிலுஜா, V.அருஞ்சனா, T.கஜாஜினி, A.அர்ச்சனா, P.மயுரதன், M.பிரகண்ணன், N.பிரபா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.விஜயராசா, A.சுஜந்தினி, E.நிரஞ்சன், S.பிரசாந்தினி, M.லோகிதாசன், T.தினேஸ்கரன், V.கார்த்திகா ஆகியோர் மாணவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள

மேலும் க.பொ.த உ/தர பிரிவு ஏற்படுத்தப்படுவதற்கு பல வழிகளிலும் உதவிய முன்னாள் பிரதேச செயலாளரும், திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபராக கடமையாற்றிய எஸ். அருள்ராசா அவர்களுக்கு 16.03.2010ந் திகதியன்று இப்பாடசாலையில் கோ.கருணைநாயகம் தலைமையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதன்போது அதிபரினால் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை. சிறப்பம்மசமாகும். மேலும் க.பொ.த. உயர் தரம் ஆரம்பித்து வைப்பதற்கு பல வழிகளிலும் உதவி புரிந்த முதலமைச்சர் கௌரவ S.சந்திரகாந்தன், கௌரவ அமைச்சர் V. முரளிதரன், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேசசபை தவிசாளர் S.பாக்கியராஜா ஆகியோருக்கு அதிபரினால் நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் 04.08.2011ல் இப்பாடசாலை சரஸ்வதி வித்தியாலயமாக இருந்து சரஸ்வதி மாகாவித்தியாலயமாக மாற்றப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையில் உ/த வகுப்பு ஆரம்பிப்பதற்காக கோ.கருணைநாயகம் அதிபரின் அயரா முயற்சி பாராட்டப்படவேண்டியதொன்றாகும்.

## 22) மாடி கட்டடம் அமைப்பு

க.பொ.த உ/தரம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு 2011ம் ஆண்டு பிற்பகுதியில் இடப் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் 90 x 25 நீள அகலமுடையதாக 2250 சதுர அடி பரப்பளவில் மாடிக் கட்டடம் கிடைக்கப்பெற்றது. இக்கட்டடமானது முதலமைச்சராக இருந்த கௌரவ S.சந்திரகாந்தன் அவர்களின் முயற்சியினால் பாடசாலை துரித அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இக்கட்டடமானது புதிதாக வாங்கிய காணியின் பாடசாலையின் வடமேற்கு மூலையில் கட்டப்பட்டுள்ளது. ம.தருமரெட்ணம் அதிபராக இருந்தபோது காணி வாங்குவதற்காக முயற்சி எடுக்கப்பட்டது. பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளராக க.முருகமூர்த்தியினால் இது சம்பந்தமான கூட்டக்குறிப்பு எழுதப்பட்டுள்ளது. பழைய மாணவர்களான க.குணசேகரம், செ.அருள்ராசா, வே.அமலநாதன், அ.ரணி, இ.மாசிலாமணி ஆகியோர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொகை பணம் அன்பளிப்பு செய்திருந்தார்கள். மேலும் மாணிக்கப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை தலைவராகிய எஸ். நடராசா அவர்களினால் ஆலய பரிபாலன சபையின் சார்பில் ஒரு தொகைப் பணமும், இப் பாடசாலைக்கு புதிதாக காணி வாங்குவதற்குக் கொடுக்கப்பட்டது. மேலும் பொது மக்களிடமிருந்தும் விவசாய சங்கத்திடமிருந்தும் சேகரிக்கப்பட்ட பணமும் சேர்த்து T.பரமேஸ்வரி (தாதி) அவர்களிடமிருந்து 1, 30,000/= (1 லெட்சத்து 30ஆயிரம்) ரூபாவிற்கு இக் காணி வாங்கப்பட்டது. இவ் உறுதிக் காணி காளிக்குட்டி சின்னவன் என்பவரிடமிருந்து ஏற்கனவே அவர்கள் வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காணி 35mx25m நீள அகலமுடைய 750 சதுர மீற்றர் பரப்பளவுடையதாக காணப்படுகிறது. இக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் அப்போதிருந்து கோ. கருணைநாயகம் அவர்களால் சம்பிரதாயபூர்வமாக திறக்கப்படாவிட்டாலும் தற்காலிகமாக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் பின்னர் ஓரளவு இடப்பற்றாக்குறை தீர்க்கப்பட்டது.

இதன் பின்னர் 16.02.2012ந் திகதி பாடசாலையின் இல்ல விளையாட்டு போட்டிக்கு பிரதம அதிதியாக கௌரவ பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 23) விஞ்ஞான ஆய்வுகூடம்

12.06.2012ம் திகதி விஞ்ஞான ஆய்வுகூடம் கட்டட வேலை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் ஆய்வுகூடம் பாடசாலையின் வடமேற்கு பகுதியில் மாடிக் கட்டிடத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டது. 40 x 20 அடி நீள அகலத்தின் 800 சதுர அடி பரப்பில் இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. 23.10.2013ந் திகதியன்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் கௌரவ விமலதீரதிசாநாயக்காவினாலும், முதலமைச்சர் கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தனாலும் திறந்து வைக்கப்பட்டது. இவ்வைபவம் அதிபர் திருமதி.தவமணிதேவி குணசேகரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ் வைபவத்தில் பூ. பிரசாந்தன் (மாகாண சபை உறுப்பினர்), சட்டத்தரணி S. சிவநாதன், M. விமலநாதன் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்), பூ. பாலசந்திரன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர்), திருமதி. புள்ளநாயகம் (ZDE) ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி சிலை அமைப்பு

மேலும் 27.05.2013ம் திகதி இப்பாடசாலையின் முன் பகுதியில் சரஸ்வதி சிலை ஒன்று வைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சிலை 2014ம் ஆண்டு உயர்தர மாணவர்களால் குழுச் செயற் திட்டத்தின் மூலம் த. ஹரிகரன், க. சலோஜன், த. சுரேகா, கோ. கோகிலவதனி, மா.பிரபாஜினி, பு.உசாநந்தினி, சு.பானுஜா, க.இந்துஜா, தயாளினி ஆகியோரின் பங்களிப்புடன் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 24) சாதனையாளர் கௌரவிப்பு

29.11.2018ல் இப்பாடசாலையில் சாதனையாளர் கௌரவிப்பும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. உதவி கல்வி பணிப்பாளர் க.சுந்தரலிங்கம் அதிதியாக கலந்து சிறப்பித்திருந்தார். 1–5 வரையுள்ள மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பரிசில்களும் பணமும் வழங்கப்பட்டன. தரம் 5ல் சித்தி பெற்ற மாணவர்களுக்கும், க.பொ.த. சா/தர பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் கற்பித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கல்வி அதிகாரிகளும், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும், பொதுமக்கள், பழைய மாணவர்கள் பலரும் கலந்து சிறப்பித்தார்கள்.

## 25) மைதான புனரமைப்பும் இல்ல விளையாட்டுப் போட்டியும்

மீண்டும் கி.அ.சங்கம், பிரதேச சபை, பா. உறுப்பினர்களின் உதவிகள் மூலம் மைதானம் புனரமைக்கப்பட்டு அதிபர் தலைமையில் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. 2019.02.08ம் திகதி நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி. அ. சிறிகாந்த், ம.தெ.எ.பற்று பிரதேச செயலாளர் சத்தியகௌரி தரணிதரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராஜா, ஜெயசந்திரன் (பிரதேச சபை உறுப்பினர்), மாணவர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை இதன்போது 261 மாணவர்கள் 27 ஆசிரியர்களும் கலந்து கொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26) நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் அமைப்பு

2019.04.10ம் திகதி கிராம சக்தி திட்டத்தின் கீழ் இப்பாடசாலைக்கு நீர் சுத்திரிக்கும் இயந்திரம் பொருத்துவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி உதவி செயலாளர், வாகரை விமானப்படை மேற்பார்வையாளர், வலய கல்வி பணிப்பாளர், பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். இவ் நீர் சுத்திகரிக்கும் இயந்திரம் கிடைத்ததன் மூலம் மாணவர்களின் நீர் பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டது.

## 27) ஏனைய பௌதிக வள உதவிகள்

மேலும் 11.01.2022ம் திகதி கௌரவ யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அவர்களின் பங்களிப்புடன் வல்வை 73 அமைப்பின் அனுசரணையுடன் இப்பாடசாலைக்கு போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எஸ். அருள்ராசா கலந்து சிறப்பித்திருந்தார். மேலும் அதிபரும் தேசிய மாவட்ட அமைப்பாளருமாகிய T.சுரேஷ் அவர்களும், ஆசிரியர் K.குககுமாரராஜா அவர்களும், உதவி கல்விப் பணிப்பாளர் K.சுந்தரலிங்கம் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். இந்நிகழ்வுக்கு அதிபர் திருமதி M.குணசேகரம் தலைமை தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். மேலும் 20.05.2022ம் ஆண்டின் மட்டக்களப்பு மாவட்ட கௌரவ பா.உ இராசமாணிக்கம் சாணக்கியனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப்பாடசாலைக்கு வாத்தியக்கருவிகள் அன்பளிப்பு செய்யப்பட்டமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

த. சுந்தரலிங்கம் அதிபராக கடமையாற்றிய 1998களில் உதவி ஆசிரியராக பணிபுரிந்த பொன்னம்பலம் துரைராசாவின் முயற்சியினால் இப்பாடசாலைக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினராக கௌரவ கோ.கருணாகரன் இதற்காக தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்திலிருந்து 20,000/- வை ஒதுக்கி கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கௌரவ ஸ்ரீநேசன் அவர்களும் சரஸ்வதி மகா வித்தியாலய மலசலகூட திருத்தத்திற்காக 2 இலட்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபாவும், விஷ்ணு ஆலய நிருமாண பணிக்காக 10 இலட்சம் ரூபாவும் ஒருக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 2016ம் ஆண்டின் பின்னர் இப்பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய லூர்த் அனுசியா மற்றும் மு.பிரகலாதன் (பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் (2018 – 2021)) மற்றும் K.பிரகலாதன் போன்றோர் இப் பாடசாலைக்கு தேவையான கதிரைகள், மின்விசிறிகள், மின்விளக்குகள், நுழைவாயில் கதவு முதலிய வசதிகளை செய்து கொடுத்திருக்கின்றார்கள். மேலும் கு. தனுபிரசாந்த் (பழைய மாணவன்) அவர்கள் 2019 களில் சிற்றுண்டிச் சாலைக்கு தகரங்களை வழங்கி உதவி புரிந்தமை அறிய முடிகின்றது. அதே போன்று அ.அபிராமி எனும்பழைய மாணவி விளையாட்டு உபகரணங்கள், கதிரைகள் முதலியவற்றை கல்வி வசதிகளை மேம்படுத்தும் நோக்கோடு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2018களில் பழைய மாணவர்களினால் கதிரைகள் சில திருத்தி கொடுக்கப்பட்டுள்ளன. பாதணிகளும் வருடா வருடம் வழங்கி வைக்கப்படுகின்றது குறிப்பிடத்தக்கது. மேலும் இளைஞர் விளையாட்டு கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு கதிரைகள் சில அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டதுடன், விளையாட்டு போட்டிக்கான கிண்ணங்களும், பரிசில்களும் அன்பளிப்பாக வழங்கிவைக்கப்பட்டன.

மேலும் கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் முதலியவற்றால் 55" தொலைக்காட்சி பெட்டி ஒன்றும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் சில கதிரைகள் உட்பட மாணவர்களுக்கான பாதணிகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பொருட்கள் RDS தலைவரான கி.மேகலாதன் அவர்களால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் முன்னாள் ஆலய தலைவர் ச.நடராசா அவர்கள் 1978ம் ஆண்டு இப்பாடசாலையில் 5ம் ஆண்டு கல்வி பயின்ற நண்பர்களுடன் இணைந்து நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒலிபெருக்கி வசதிகளை செய்து கொடுத்திருப்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளது எனலாம். மேலும் மு.விமல்ராஜ் என்பவர் இப்பாடசாலையில் உள்ள ஓர் கட்டிடத்திற்கு வர்ணம் பூசுவதற்கு உதவி புரிந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

## 28) க.பொ.த சா/த அடைவு முன்னேற்றம்

க.காளிக்குட்டி அவர்கள் அதிபராக கடமையாற்றிய 1994ம் ஆண்டு க.பொ.த சா/த பரீட்சைக்கு முதன் முறையாக மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையிலிருந்து தோற்றினார்கள். 1993ம் மற்றும் 1994ம் வருடங்களில் 20 மாணவர்கள் கல்வி கற்று வந்துள்ள போதிலும் 09 மாணவர்கள் மாத்திரமே பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். இவர்களில் 05 மாணவர்கள் க.பொ.த உ/த பயில்வதற்கு தகுதி பெற்றிருந்தார்கள். அதாவது 60% மான மாணவர்கள் சித்தியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி பல மாணவர்கள் க.பொ.த உயர்தரம் பயில்வதற்கு சித்தியடைந்திருந்த போதிலும் போதிய தகவல்களை பெற முடியவில்லை. இருந்த போதிலும் 2010ம் ஆண்டிலிருந்து கா.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் விபரங்களும், சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களும் கிடைக்கப்பெற்றது. அதன் விவரம் பின்வருமாறு.

**க.பொத. சாதாரண தரம்**

| ஆண்டு | தோற்றியோர் | தகுதிபெற்றோர் | வீதம் (%) |
|---|---|---|---|
| 2010 | 34 | 16 | 47.06 |
| 2011 | 33 | 12 | 36.36 |
| 2012 | 37 | 08 | 21.62 |
| 2013 | 28 | 13 | 46.43 |
| 2014 | 27 | 09 | 33.33 |
| 2015 | 30 | 05 | 16.67 |
| 2016 | 26 | 16 | 66.67 |
| 2017 | 33 | 14 | 42.42 |
| 2018 | 18 | 15 | 84 |
| 2019 | 16 | 04 | 25 |
| 2020 | 25 | 07 | 28 |
| 2021 / 2022 | 32 | 21 | 66 |

மேற்படி பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களினதும் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களையும் வைத்து பார்க்கின்ற போது சராசரியாக கடந்த 12 வருடங்காலம் அதாவது ( 2010 – 2022) வரை உள்ள காலப்பகுதியில் 50% குறைவான மாணவர்களே க.பொ.த உ/த பயில தகுதி பெற்றுள்ளார்கள். 2016, 2018 மற்றும் 2021ம் ஆண்டுகளில் தோற்றிய மாணவர்களில் சித்தி அடைந்த வீதம் உயர்வாக காணப்படுகின்ற அதேவேளை 2011, 2012, 2014, 2015, 2019, 2020ம் ஆண்டுகளில் மாணவர்களின் சித்தி அடைந்த வீதம் குறைவாக காணப்பட்டிருக்கின்றமை கவலை அளிப்பதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 2016ம் ஆண்டில் க.பொ.த. சா/த தோற்றிய 26 மாணவர்களில் 16 பேர் சித்தியடைந்து 67% மான மாணவர்கள் க.பொ.த உ/த பயில தகுதி பெற்றிருந்தமை பாராட்டப்பட வேண்டியதாகும். அந்த வருடத்தில் செ.பிரணித்தா எனும் மாணவி அதி சிறந்த பெறுபேறாக 6A, 2B யுடன் சித்தி பெற்ற அதே வேளை அ.ஜிலோஸ்கரன் எனும் மாணவன் 7Aயுடன் 1B யும் பெற்று சாதனை படைத்திருந்தனர். மேலும் நா.சபேஸ்காந்த் எனும் மாணவனும் 6A மற்றும் 1B ம் பெற்று இவ்வருடத்தில் இப்பாடசாலைக்கு பெருமை தேடி கொடுத்தமை சிறப்பம்சமாகும்.

இதேபோன்று 2018ம் ஆண்டிலும் 18 மாணவர்கள் க.பொ.த சா/த பரீட்சைக்கு தோற்றிய அதே வேளை அவ்வருடத்தில் 15 மாணவர்கள் சித்தியடைந்து அதாவது 84% மாணவர்கள் க.பொ.த (உ/த) பயில்வதற்கு தகுதி பெற்று அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்திருந்தனர்.

மேலும் 2021 / 2022 ம் ஆண்டில் தோற்றிய மாணவர்கள் 32 பேரில் 21 மாணவர்கள் சித்தி பெற்று அதாவது 66% மாணவர்கள் க.பொ.த (உ/த) பயில தகுதி பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும். விசேடமாக காண்டீபன் பவிராஜ் எனும் மாணவனும் ரவி டிலுக்ஷனா எனும் மாணவியும் 6A சித்திபெற்று சாதனை படைத்திருந்தனர். அதேவேளை தங்கராசா சுகுணா என்னும் மாணவியும், தெய்வநாயகம் கசேகாந்தன் எனும் மாணவனும் 5A சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்திருந்தார்கள். மேலும் குருகுல சிங்கம் தனுசியா மற்றும் சுதேஸ்குமார் வேணுஜா ஆகியோர் 4A சித்தி பெற்றிருந்தமை பாராட்டப்பட வேண்டியதாகும். மேலும் 2021 / 2022ம் ஆண்டில் தோற்றிய மாணவர்களில் 06 பேர் கணித பாடத்தில் "A" சித்தியும், 03 பேர் "B" சித்தியும் பெற்று முதன் முறையாக இப்பாடசாலைக்கு கணிதப் பாடத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்று சாதனை படைத்திருந்தார்கள். இம்மாணவர்களை ஆற்றுப்படுத்திய கணித ஆசிரியர்கள், அதிபர் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களாவர். எனினும் ஒட்டுமொத்த க.பொ.த (சா/த) பெறுபேறுகளை வைத்து நோக்கும் போது கடந்த 28 வருடங்களில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் மேலும் அதிகரிக்கப்படவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பாடசாலை நலன் விரும்பிகளினதும், பெற்றோர்களினதும் விருப்பமாகும். இதற்கான வழிகாட்டல்களும், ஆற்றுப்படுத்தல்களும் எதிர்காலத்தில் அதிகரிக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

## 29) க.பொ.த. உ/த அடைவு முன்னேற்றம்

2009ம் ஆண்டு உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் அம்மாணவர்கள் 2011 ஆம் ஆண்டு முதன்முதலாக பரீட்சைக்கு தோற்றினார்கள். தோற்றிய 13 மாணவர்களில் 08 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல தகுதி பெற்றிருந்தனர். அதாவது 62%மான மாணவர்கள் சித்தியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் விவரம் பின்வருமாறு.

**க.பொ.த. உயர்தரம்**

| ஆண்டு | தோற்றியோர் | தகுதிபெற்றோர் | வீதம் (%) |
|---|---|---|---|
| 2011 | 13 | 08 | 62 |
| 2012 | 13 | 06 | 46.15 |
| 2013 | 08 | 07 | 87.5 |
| 2014 | 07 | 07 | 100 |
| 2015 | 07 | 03 | 42.86 |
| 2016 | 12 | 06 | 50 |
| 2017 | 08 | 07 | 87.5 |
| 2018 | 14 | 05 | 35.7 |
| 2019 | 10 | 05 | 50 |
| 2020 / 2021 | 09 | 04 | 45 |
| 2021 / 2022 | 14 | 07 | 50 |

மேற்படி க.பொ.த (உ/த) சித்தியடைந்துள்ள மாணவர்களின் பெறுபேறுகளை வைத்து நோக்கும் போது 2013, 2014 மற்றும் 2017ம் வருடங்களில் சித்தி அடைந்த மாணவர்கள் வீதம் 88%க்கு மேல் காணப்படுகின்றது. அதேவேளை 2015 மற்றும் 2018ம் வருடங்களில் சித்தியடைந்தோர் வீதம் சராசரி 40% மாகவே காணப்படுகின்றது. ஆனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் செல்ல பலர் தகுதி பெற்றிருந்த போதிலும் பல்கலைக்கழகம் செல்ல அனுமதி கிடைத்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவானதாகவே காணப்படுகின்றது. இறுதியாக நடைபெற்ற 2021 / 2022 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் கனகரத்தினம் லதுசன், குணசிங்கராசா சஜீவன் ஆகிய இரண்டு மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் க.பொ.த (உ/த) ஆரம்பிக்கப்பட்ட 2011ம் ஆண்டிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெறுபேற்றை வைத்து நோக்கும் போது கடந்த 10 வருடங்கள் சித்தியடைந்தவர்களின் வீதம் 60% மானதாகவே காணப்படுகின்றது. பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களின் தொகையும் குறைவாகவே காணப்படுகின்றது. எனவே பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களின் தொகையும், சித்தியடையும் மாணவர்களின் தொகையும் எதிர்காலத்தில் அதிகரிக்கப்பட வேண்டியதொன்றாகும். அதே போன்று பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களின் தொகையும் எதிர்காலத்தில் அதிகரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். கலைத்துறையில் மாத்திரமல்ல ஏனைய துறைகளிலும் மாணவர்களின் அடைவு மட்டம் அதிகரிக்கப்படுவதுடன் இதற்கான ஒத்துழைப்பும், ஒத்தாசையும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இணைந்து செயலாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமானதாகும்.

## 30) புலமைப்பரிசில் பரீட்சை

மாங்காடு சரஸ்வதி மகா வித்யாலயத்திலிருந்து 5ம் ஆண்டு புலமை பரீட்சைக்கு தோற்றி முதன் முதலில் சித்தியடைந்த மாணவி செல்வி சிவஞானம் விஜிதராணி ஆவார் இதன் பின்னர் 2008ம் ஆண்டு வரை புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் விவரங்களையோ மற்றும் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களையோ பூரணமாக பெற முடியவில்லை. இருந்தபோதிலும் 2008ம் ஆண்டிலிருந்து கடந்த 15 வருட புலமைபரிசில் பெறுபேறுகளை வைத்து நோக்கும் போது 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் தொகை 45%மாக காணப்படுகின்றது. விவரம் வருமாறு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் பரீட்சை

| ஆண்டு | விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | 70க்கு அதிகம் | சித்தியடைந்தோர் |
|---|---|---|---|---|
| 2008 | 27 | 25 | 06 | – |
| 2009 | 32 | 24 | 04 | – |
| 2010 | 38 | 34 | 18 | – |
| 2011 | 37 | 34 | 23 | 01 |
| 2012 | 39 | 39 | 17 | 01 |
| 2013 | 28 | 25 | 13 | 02 |
| 2014 | 20 | 18 | 06 | 01 |
| 2015 | 32 | 32 | 20 | 02 |
| 2016 | 25 | 24 | 11 | – |
| 2017 | 25 | 23 | 10 | – |
| 2018 | 24 | 24 | 12 | 02 |
| 2019 | 23 | 22 | 12 | – |
| 2020 | 27 | 24 | 14 | – |
| 2021 | 23 | 22 | 17 | 01 |
| 2022 | 22 | 18 | 18 | 01 |

2013, 2015 மற்றும் 2018 வருடங்களில் தோன்றிய மாணவர்களின் இருவர் வீதம் சித்தியுடைந்திருந்தார்கள். 2013ம் ஆண்டில் க.டிலுக்சன் மற்றும் தி. மனோச்கரன் ஆகிய மாணவர்கள் புலமைப் பரீட்சையில் சித்திபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் 2015 ஆம் ஆண்டில் கா.பவிராஜ் மற்றும் தே.ஹசேகரன் ஆகிய 2 மாணவர்கள் சித்தி பெற்றிருந்தார்கள். மேலும் 2018 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் க.கிபாஞ்சன் மற்றும் கோ.கிருஷோத்மன் ஆகிய இரு மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்திருந்தார்கள். மேலும் 2011, 2012, 2014, 2021ம் வருடங்களில் 5ம் ஆண்டு புலமை பரிட்சையில் தலா ஒரு மாணவர்கள் வீதம் சித்தியடைந்துள்ளார்கள். இவர்கள் முறையே நே.வேணுஜன், ஜெ.சஞ்சயன், இ.சரண்ஜன், கு.லபீராஜ் ஆகிய மாணவர்கள் சித்தி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். 2022ல் இறுதியாக நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 22 மாணவர்களில் 14 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சற்று குறிப்பிடத்தக்க பெறுபேற்றை வெளிகாட்டியுள்ளமை கடந்த காலங்களை விட இம்முறை கூடுதலான திறமைகளை மாணவர்கள் பெற்றுள்ளமை வரவேற்கப்படக்கூடியதொன்றாகும். அதிலும் கே.லபீராஜ் என்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் 146 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருப்பது பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது இதற்காக ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

## 31) பாடசாலையின் கல்வி வளர்ச்சிப் போக்கு

ஆரம்ப காலத்தில் இக்கிராமத்தின் கிராம அதிகாரிகளாக கடமையாற்றிய முண்டாப்போடி, வே. கணபதிப்பிள்ளை (பழைய விதானையார்) ஆகிய இருவரும் இப்பாடசாலையின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியிருந்தனர். மேலும் கிராம சபை மற்றும் கிராமோதய சபை மூலமாக கடமையாற்றிய அழகிப்போடி (வண்ணக்கர்), சீனித்தம்பி, கா.இளையதம்பி, க.முருகேசு, க.தங்கராசா, க.வேலாயுதம் (ஆசிரியர்), K.கந்தப்பெருாள் (ஆசிரியர்), K.பாக்கியராசா ஆகியோர் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளனர்.

மேலும் இப்பாடசாலையில் கல்வி கற்ற S.புஸ்பராசா 1989ம் ஆண்டு வடகிழக்கு மாகாணசபை தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றியமை இப்பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. அதே போன்று ம.தெ.எ. பற்று பிரதேச சபைகயின் தவிசாளராக இப்பாடசாலையில் கல்வி கற்ற S.பாக்கியராசா (கண்ணன்) 2008 தொடக்கம் 2010ம் ஆண்டு வரை கடமையாற்றியமை சிறப்பானதாகும். அதேபோன்று தற்போது T. ஜெயச்சந்திரன் அவர்களும் பிரதேச சபை உறுப்பினராக இக்கிராமத்தின் சார்பில் தெரிவு செய்யப்பட்டு கடமையாற்றியமை முக்கியமான தொன்றாகும்.

மேலும் இப்பாடசாலையில் கல்வி கற்ற S.அருள்ராசா என்பவர் 1981ம் ஆண்டு இக்கிராமத்தின் முதலாவது பட்டதாரியாக யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கலைப்பட்டதாரியாக வெளியேறி தற்போதும் உயர் தொழிலில் இருப்பது இப்பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. அடுத்தாக 1983ல் க. குணசேகரம் பேராதனை பல்கலைக் கழகத்திற்கும், 1985ம் ஆண்டு க.சுந்தரலிங்கம் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் கலைத்துறையில் தெரிவு செய்யபட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரிலிருந்து சென்றமை இப்பாடசாலைக்கு சிறப்பம்சமாக திகழ்கிறது. மேலும் 1986ல் T.இன்பராசா கணிததுறையில் கிழக்கு பல்கலைக்கழகத்திற்கும், T.சிவயோகம் கலைத்துறையில் 1987ம் ஆண்டிலும், S.திருநேசராசா 1989ம் ஆண்டிலும் கணிதப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகம் சென்றிருந்தமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இதன் பின்னர் 1990களில் P.கருணாமூர்த்தி வர்த்தக பிரிவிலும், T. சந்திரசேகரம் மற்றும் P. சபாரெட்ணம் ஆகியோர் 1991ம் ஆண்டில் கலைப் பிரிவுக்கும் சென்றமை சிறப்பம்சமாகும். 1992ல் K.குககுமாரராஜா கணித துறையில் தெரிவுசெய்யப்பட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு சென்று இப்பாடசாலைக்கு பலர் பெருமை தேடித்தந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பின்னர் 10 வருடங்களுக்கு பின்னர் அதாவது 2002க்கு பிறகு தான் பலர் தொடர்ச்சியாக பல்கலைக்கழகம் சென்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இக்கிராமத்தில் இதுவரைக்கும் உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் 1981ம் ஆண்டு முதல் கடந்த 40 வருடங்களில் 85க்கும் மேற்பட்டவர்கள் பட்டதாரிகளாகவும், டிப்ளோமா மற்றும் ஏனைய பட்டங்கள் பெற்றவர்களாகவும் திகழ்கின்றமை சிறப்பம்சமாகும். மேலும் க.பொ.த உ/தரத்தில் சித்தியடைந்தோர் தொகை 2021ம் ஆண்டு தகவலின் படி 594 பேரும், க.பொ.த சா/தரத்தில் சித்தியடைந்தோர் தொகை 910 பேராகவும் காணப்படுகின்றது. மேலும் 112 பேர் வரை அரச உத்தியோகத்தில் கடமையாற்றி வருவது இப்பாடசாலைக்கு மாத்திரமல்ல இவ் ஊருக்கே பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது எனலாம்.

ஏ.சுப்பிரமணியம் அதிபர் மாங்காடு றோ.க.த.க. பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். இவருடன் இவரது சகோதரர்களும் இங்கு கல்வி கற்றுள்ளனர். இவர் செட்டிபாளையம் வம்மிக் கேணியில் 7.9.1933ல் பிறந்து மாங்காடு பாடசாலையில் 1940 தொடக்கம் 8ம் ஆண்டு வரை கல்வி கற்றவர். இவர் வே. சித்திரருடன் ஒன்றாக படித்தவர். இவரது காலத்தில் 01.05.1978 – 07.09.1990 வரையுள்ள உள்ள காலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டது. சு.மதிவதனி (செட்டிபாளையம்) துளசிமணி (செட்டிபாளையம்) க.சுந்தரலிங்கம் (மாங்காடு) அ.அன்னலெட்சுமி (மாங்காடு) பொ.துரைராசா (மாங்காடு) ஆகியோர் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றினர். இதன் பின்னர் இ.சிவயோகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.ரவிச்சந்திரன, வே.கணேசன், கா.சச்சிதானந்தம், அ.ராணி த.சந்திரசேகரம் முதலானோர் இப்பாடசாலையில் கற்பித்துள்ளனர் இதிலிருந்து பாடசாலைக்கு பழைய மாணவர்களின் பங்களிப்பு தொடர்ச்சியாக இடம் பெற்று வந்துள்ளது.

## ஆரம்பகால ஆசிரியர்கள்

கணபதிப்பிள்ளை வேலாயுதம் 1956ம் ஆண்டு முதலில் ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டு மாங்காடு, கக்கலை, நுவரெலியா, கிரான்குளம் முதலிய பாடசாலைகளில் கற்பித்தவர். 1956ல் கதிர்காமர் அதிபராக இருந்தபோது க.வேலாயுதம் உதவி ஆசிரியராக மாங்காடு றோ.க.த.க.பாடசாலையில் கடமையாற்றியுள்ளார். 1971/72 கால கட்டங்களில் இடையிடையே இப்பாடசாலையில் பதில் கடமையாற்றியுள்ளார். பாடசாலை செயற்பாடுகளில் மிகவும் ஆர்வம் உள்ளவர். பாடசாலையில் அலுவலக அறை ஒன்று இல்லாத அவ்வேளை அருகிலுள்ள இவரது வீட்டிலேயே பாடசாலையின் முக்கிய ஆவணங்கள், பொருட்கள் வைக்கப்படுவது வழமை. இவர் தனது காலத்தில் பாடசாலையில் 6 1/2 மணிக்கு பெரிய மணியில் மணி அடிப்பது வழக்கம். இம்மணி ஒலித்தவுடன் மாணவர்களுக்கும், ஏனையோருக்கும் நேரத்தை நினைவுபடுத்துவது மாத்திரமல்ல இன்று பாடசாலை நடைபெறும் எனும் சைகையையும் இம்மணி ஒலி ஞாபகப்படுத்துகின்றது. பாடசாலை நடைபெறாத நாட்களில் இம்மணி ஒலிக்காது. வெளியூர் ஆசிரியர்கள் பலர் போக்குவரத்தில் பேருந்து இல்லாத போது இரவில் இவரது வீட்டிலேயே தங்கிநிற்பது வழமை. இவர்களை ஆதரிப்பதில் மனைவி கண்ணம்மையின் பங்களிப்பு அதிகமாகும்.

மேலும் கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதிகளில் ஒருவரான பேராசிரியர் மயில்வாகனம் பத்திநாதன் ஆரம்பத்தில் மாங்காடு றோ.க.த.க.பாடசாலையில் கல்வி கற்றவர். இவரின் அக்கா கிருஷ்ணவேணியும் (விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை) இங்கு படித்தவர். காரணம் இவர்களின் தாய் பரமேஸ்வரி ஆசிரியை இங்கு கற்பித்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 01.09.1961ல் தவராஜா பூரணம்மா முதலில் பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டு கோயில் போரதீவு மற்றும் மாங்காடு பாடசாலைகளில் கடமையாற்றியுள்ளார். திரு.வ.கணபதிப்பிள்ளை 01.11.1968ல் செட்டிபாளையத்தில் முதல் நியமனம் பெற்றார். அதன்பின்னர் பல பாடசாலைகளில் கடமையாற்றி வலயக்கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். இதன்பின்னர் ம.வ.தெய்வநாயகம் பூபாலரெலத்தினம் 02.05.1979ல் ஆசிரியர் நியமனம் பெற்று கல்முனை பற்றிமா உட்பட பல பாடசாலைகளில் பணிபுரிந்துள்ளார். 26.12.1984ல் செ.அருள்ராசா, க.சுந்தரலிங்கம், அ.அன்னலெட்சுமி ஆகியோர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டு முறையே குருநாகல், பாதுக்க, மாத்தளை ஆகிய இடங்களில் பணிபுரிந்துள்ளார்கள். இதன்பின்னர் க.குணசேகரம், செல்வி.இ.சிவயோகம் ஆகியோர் 22.08.1988ல் மாங்காடு சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியர்களாக பணிபுரிந்துள்ளார்கள். பின்னர் 26.12.1986ல் செ.அருள்ராஜா பட்டதாரி ஆசிரியராக மண்டூரிலும், 23.12.1988ல் க.குணசேகரம் பட்டதாரி ஆசிரியராக கோட்டைக் கல்லாற்றிலும் பணிபுரிந்துள்ளார்கள். இவர்களின் பின்பே ஏனைய ஆசிரியர்கள் இவ்வூரிலிருந்து நியமனம் பெற்றனர். பொ.துரைராசா, க.மகேந்திரன், கா.சச்சிதானந்தம், திருமதி.கோ.கணேசமூர்த்தி, திருமதி.ச.குணகேந்திரன், செல்வி.இ.லூத்அனுசியா, பொ.மேகவண்ணன், திருமதி.கோ.ராஜ்குமார், திருமதி.ஜெ.தினேஸ்வரன், திருமதி.இ.தருமராஜா ஆகியோர்களும் ஆசிரியர்களாக இப்பாடசாலையில் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் உள்வாரியாக மாத்திரமல்ல வெளிவாரியாகவும் பலர் பட்டம் பெற்று உயர் பதவிகளில் கடமையாற்றியிருப்பது முக்கியமானதொன்றாகும். வ. கணபதிப்பிள்ளை 1985ம் ஆண்டு வெளிவாரி பட்டத்தை இவ்வூரில் முதன்முதலாக பெற்றுக்கொண்ட அதே நேரம் அகில இலங்கை கல்வி நிருவாக சேவையில் தெரிவு செய்யப்பட்டு 1990ம் ஆண்டு முதல் உ.கல்வி பணிப்பாளராகவும் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளராகவும் உயர் பதவியில் கடமையாற்றி இருந்தமை அறியமுடிகிறது. அடுத்தாக 1992 / 93ம் ஆண்டுகளில் P.துரைராசா மற்றும் எஸ்.நித்தியகலா போன்றவர்களும் வெளிவாரியாக பட்டம் பெற்றமை சிறப்பம்சமாகும். இதனைத் தொடர்ந்து பலர் வெளிவாரியாக பட்டம் பெற்று வெளிவந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் S.அருள்ராசா 1984ம் ஆண்டு முதல் பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றிருந்த போதிலும் 1991 முதல் அகில இலங்கை நிருவாக சேவை பரீட்சையில் சித்திபெற்று பிரதேச செயலாளராகவும், மேலதிக அரச அதிபராகவும் அமைச்சின் செயலாளராகவும், தற்போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கிழக்கு மாகாண பணிப்பாளராகவும் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் க. சுந்தரலிங்கம், க.குணசேகரம் ஆகியோர் ஆசிரியர்களாக இருந்து தற்போது உதவிக் கல்விப் பணிப்பாளர்களாக கடமையாற்றி வருவது சிறப்பம்சமாகும். க.குணசேகரம் கல்வியலாளர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தமையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொன்றாகும். மேலும் இவர் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணி புரிந்துள்ளார். மேலும் க. சுந்தரலிங்கம் மட்டக்களப்பு கல்வி கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணிபுரிந்துள்ளார். சிவநாதன் ஜசிதா மாங்காடு சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை கற்றிருந்த போதிலும் 2013ல் மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்பட்டு அகில இலங்கை மருத்துவ சேவையில் தற்போது வைத்தியராக கடமையாற்றுவது பெருமை தேடித் தருவதாக அமைந்துள்ளது.

த. இன்பராசா மட்டக்களப்பு தொழில் நுட்ப கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராக பணியாற்றி வருகின்றார். மேலும் பொ.துரைராசா அவர்களும் ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கருணாமூர்த்தி அவர்கள் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியுள்ளார். மேலும் பலர் MA பட்டதாரிகளாகவும் MDE மற்றும் Dip in Edu, MA(T.ED) முதலிய பட்டங்களையும் பெற்று பல துறைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

மேலும் ஆரம்ப காலத்தில் இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் ஆசிரிய சேவையிலும், சுகாதார சேவை, முகாமைத்துவசேவை சாரதி, காவலாளி மற்றும் பொலிஸ் சேவையிலும் வேலை செய்து வருகின்றனர். அத்துடன் பலர் அரச சேவைகளில் பட்டதாரிகளாக, மாவட்ட, பிரதேச செயலகங்களிலும் ஏனைய திணைக்களங்களிலும் கடமையாற்றி வருகின்றனர். ஏனையோர் தனியார் துறைகளிலும் வேலை செய்வதுடன் 75 பேருக்கு மேற்பட்டோர் வெளிநாடுகளில் வேலைபுரிவோராகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணக்கூடியதாகவுள்ளது. இப்பாடசலையில் ஆரம்ப கல்வி பயின்றவர்கள் மாத்திரமல்ல க.பொ.த சா/தர, மற்றும் உ/தரம் பயின்ற பலர் அரச சேவைகளில் கடமை புரிவது சிறப்பம்சமாக உள்ளதெனலாம்.

மேலும் 2009ம் ஆண்டு 47 பேராக காணப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 13 வருடங்களின் பின்பு 2022ல் 112 பேராக அதிகரித்துள்ளமை கல்வியில் மாத்திரமல்ல, தொழில் துறையிலும் முன்னேற்றம் கண்டுள்ளமை அவதானிக்க முடிகிறது. அதே போன்று 2009ம் ஆண்டு 403 ஆக காணப்பட்ட நிரந்தர வீடுகளின் எண்ணிக்கை கடந்த 12 வருடங்களில் 495 ஆக அதிகரித்துள்ளமை இக்கிராமமானது கல்வி, தொழில் துறைகளில் மாத்திரமல்ல பொருளாதார ரீதியியாகவும் முன்னேற்றம் கண்டுள்ளமை இக்கிராமத்தின் கல்வியின் வளர்ச்சிப் போக்கில் முன்னேற்றம் காணப்படுவது அவதானிக்க தக்கது எனலாம்.

## மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் விபரம்

| ஆண்டு | மாணவர்கள் தொகை | ஆசிரியர்கள் தொகை |
|---|---|---|
| 1871 | 04 | 01 |
| 1920 | 28 | 02 |
| 1950 | 34 | 02 |
| 1956 | 105 | 04 |
| 1976 | 220 | 07 |
| 1986 | 243 | 07 |
| 1997 | 429 | 20 |
| 2018 | 296 | 22 |
| 2022 | 295 | 35 |

1922ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் 30க்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்றுள்ளதை அறிய முடிகின்றது. அதன்பின்னர் படிப்படியாக மாணவர்கள் தொகையும், ஆசிரியர்கள் தொகையும் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளதை மேற்படி அட்டவணையிலிருந்து காண முடிகின்றது. ஆனால் 2000ம் ஆண்டுகளில் மாணவர்கள் தொகை அதிகமாக காணப்பட்டுள்ள போதிலும் பாடசாலை இடைவிலகல் கூடுதலாக காணப்பட்டதால் பாடசாலைக்கு சமூகமளித்த மாணவர்களின் தொகை 300க்கும் குறைவாகவே காணப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் தற்போது 2022 இறுதியில் 295 மாணவர்களுடன் 35 நிரந்தர ஆசிரியர்களுடன் காணப்படுவது பாடசாலைக் கல்வியின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகின்றது. ஆரம்பத்தில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையாக ஓலை கட்டிடத்தில் காணப்பட்ட பாடசாலை தற்போது சரஸ்வதி மகாவித்தியாலயமாக வளர்ச்சியடைந்துள்ளதோடு பல கட்டிடங்களையும் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குவது மாங்காடு சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிப் போக்கில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை காணமுடிகின்றது.

மாங்காடு சரஸ்வதி மகாவித்தியாலயமானது கல்வித்துறையில் மாத்திரமல்ல விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கியமை அறிய முடிகிறது. 1975ம் ஆண்டு காலகட்டங்களில் S.லிங்கராசா என்பவர் மாங்காடு இளைஞர் விளையாட்டு கழகத்தினூடாக தேசிய மட்டத்திற்கு நீளம் பாய்தல் போட்டியில் பங்கு பற்றியமை இப்பாடசாலைக்கு மாத்திரமல்ல இவ்வூருக்கே பெருமை சேர்ப்பதாக அமைந்திருந்தது. அதன் பின் பலர் மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தாலும் தேசிய மட்ட போட்டிகளுக்கு மிக நீண்ட காலத்திற்கு பிறகு அதாவது 2010களில் பாடசாலை மட்டத்திலிருந்து இரண்டு போட்டியாளர்கள் தேசிய மட்டத்திற்கு சென்று பங்குபற்றியமை சிறப்பம்சமாகும். பேதுருசில்வா நவரஞ்சினி எனும் மாணவி தடைதாண்டல் ஓட்டப் போட்டிக்கும், புவனேந்திரன் மதன் என்னும் மாணவன் 400m ஓட்டப்போட்டிக்கும் சென்று பங்கு பற்றி வந்தமை அனைவராலும் வரவேற்கப்படவேண்டியதொன்றாகும்.

மேலும் இவ்வளர்ச்சிப் போக்கு பாடசாலையின் அபிவிருத்தியில் மாத்திரமல்ல. மாணவர்களின் பெறுபேறுகளிலு'ம் பாரிய மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பினையும், ஒத்தாசைகளையும்

**ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாகு**
**ஓதலில் சிறந்தன்(று) ஒழுக்கம் உடைமை**
**- முதுமொழிக்காஞ்சி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு - 1

# கடமையாற்றிய அதிபர்களின் விபரங்கள்

### பாடசாலை சம்பவ திரட்டு புத்தகத்திலிருந்து பெறப்பட்டவை

| ஆண்டு | பெயர்கள் |
|---|---|
| 1. 1.1940 முன்னர் | ஜோசப் ஏபிரகாம், ஜோசப் வல்லிபுரம், அருளப்பு |
| 2. 1940 – 1950 | சூசைப்பிள்ளை, செபமாலை, தங்கராசா, வீரகத்தி |
| 3. 1950 – 1956 | ஆபிரகாம் |
| 4. 1956 – 1962 | கதிர்காமர் |
| 5. 1963 – 1964 | ப.சோமசுந்தரம் |
| 6. 1964 – 1967 | கோ. ஜோசெப் |
| 7. 1968 – 1971 | க. இராசமாணிக்கம் |
| 8. 1971 – 1972 | S. சிவஞானம் |
| 9. 1972 – 1973 | ப. கந்தசாமி |
| 10. 1973 – 1977 | K. கந்தையா |
| 11. 1977 – 1978 | ஏ. காசுபதிப்பிள்ளை |
| 12. 1978 – 1979 | ஏ. தியாகராசா (தற்காலிகம்) |
| 13. 1978 – 1990 | ஏ. சுப்பிரமணியம் |
| 14. 1991 – 1992 | திருமதி. ம. தர்மரெத்தினம் |
| 15. 1993 – 1996 | க. காளிக்குட்டி |
| 16. 1997 – 1998 | க. கார்த்திகேசு |
| 17. 1998 – 2000 | த. சுந்தரலிங்கம் |
| 18. 2001 – 2007 | க. தர்மலிங்கம் |
| 19. 2008 – 2013 | கோ. கருணைநாயகம் |
| 20. 2013 – இன்று வரை | திருமதி. தவமணிதேவி குணசேகரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு - 2

# உசாத்துணை நூல்கள்

1) பாடசாலை சம்பவ திரட்டு புத்தகம் (LOG BOOK)

2) குடும்பப் புள்ளி விபர திரட்டு (பிரதேச செயலகம்)

3) தொகை மதிப்பு புள்ளிவிபர திரட்டு (பிரதேச செயலகம் (ம.தெ.எ.ப)

4) கிராம அபிவிருத்தி திட்டம் (Village development plan) – மாங்காடு

5) பாடசாலையின் ஏனைய புள்ளிவிபர பதிவேடுகள்

6) மாகோன் வரலாறு

7) மட்டக்களப்பு மான்மியம் – வித்துவான் V.C.நடராசா

8) கண்ணகி அம்மன் ஆலய வரலாறு – செட்டிபாளையம்

9) மாணிக்கப்பிள்ளையார் ஆலய கூட்டறிக்கைப் பத்தகம் – மாங்காடு

10) சென்–மிக்கேல் கல்லூரி நூற்றாண்டு விழா மலர்

11) கிராம வரலாற்று ஆய்வு நூல் – குருக்கள்மடம் – M.திருநாவுக்கரசு

12) மெதடிஸ்த தேவாலய நூற்றாண்டு விழா மலர் – களுதாவளை

13) மாவட்ட செயலக அறிக்கைகள் – மட்டக்களப்பு

14) யூதாதேயு ஆலய வரலாறு – தேற்றாத்தீவு

> **“யாதும்ஊரே யாவருங் கேளீர்**
> **தீதும் நன்றும் பிறர்தரவாரா”**
> **- கணியன்பூங்குன்றனார் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பு - 3**

## நூற்றாண்டு அபிவிருத்திப் பணிகள் விபரம்

1. முன்மதில் திருத்தமும் வர்ணம் தீட்டுதலும் – 1997 (O/L Batch)
2. கட்டடம் வர்ணம் தீட்டுதல் – 1998 (O/L Batch)
3. பாதுகாப்பு Camera (கமறா) பொருத்துதல் – 1999 (O/L Batch)
4. வாகன தரிப்பிடம் அமைப்பு – 2000(O/L Batch)
5. ஒன்று கூடல் மேடை அமைப்பு – 2001 (O/L Batch))
6. சிறுவர் விளையாட்டுப் பூங்கா அமைப்பு – 2002 (O/L Batch)
7. உள் அரங்கம் அமைப்பு, நீர்க்குழாய்த் திருத்தம் மற்றும் இரத்ததானம் வழங்கல் நிகழ்வு –2003 (O/L Batch)
8. மின் இணைப்பு மற்றும் மின்விசிறிகள் திருத்தம் – 2004 (O/L Batch)
9. சிற்றுண்டிச்சாலை அமைப்பு – 2005(O/L Batch)
10. திருவள்ளுவர் சிலை அமைப்பு – 2006 (O/L Batch)
11. விஞ்ஞான ஆய்வுகூட பொருட்கள் அன்பளிப்பு – 2007 (O/L Batch)
12. தளபாடங்கள் திருத்தம் – 2008 (O/L Batch)
13. முன் நுழைவாயில் (கேற்) மற்றும் மதில் திருத்தம் – 2009 (O/L Batch)
14. Band(வேண்ட்) வாத்திய கருவிகள் அன்பளிப்பு – 2010(O/L Batch)
15. சரஸ்வதி சிலைக்கு புதிய கூடாரம் அமைப்பு – 2011 (O/L Batch)
16. நினைவுத்தூபி அமைப்பு – 2012 (O/L Batch)
17. கட்டடகூரை திருத்தம் – 2014 (O/L Batch)
18. கழுத்துப்பட்டடி (Tie) அன்பளிப்பு – 2015 (O/L Batch)

## நிதி உதவி புரிந்தோர் விபரம்

1) கணபதிப்பிள்ளை குககுமாரராஜா ஆசிரியர்
2) தங்கராசா இராமச்சந்திரன் (சுவிற்சலாந்து)
3) செபரெத்தினம் அருள்ராசா
4) இளையதம்பி மாசிலாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்காடு உள்வாரி பட்டதாரிகள் விபரம்



## இணைப்பு - 4

1981 -2021 வரை

## மாங்காடு உள்வாரி பட்டதாரி மாணவர்களின் விபரம்

| இல | முழுப்பெயர் | தெரிவான வருடம் | பல்கலை கழகம் | கற்கை நெறி |
|---|---|---|---|---|
| 1 | செபரெத்தினம் அருள்ராசா | 1980/81 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | கலை |
| 2 | கந்தப்பெருமாள் குணசேகரம் | 1982/83 | பேராதனை பல்கலைகழகம் | கலை |
| 3 | கந்தப்பெருமாள் சுந்தரலிங்கம் | 1984/85 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | கலை |
| 4 | தவராசா இன்பராசா | 1985/86 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | கணிதம் |
| 5 | இரத்தினசாமி சிவயோகம் | 1986/87 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | கலை |
| 6 | செபரெத்தினம் திருநேசராசா | 1988/89 | கிழக்கு பல்கலைகழகம் | கணிதம் |
| 7 | ஆறுமுகம் கருணாமூர்த்தி | 1989/90 | கிழக்கு பல்கலைகழகம் | வர்த்தகம் |
| 8 | தம்பிப்பிள்ளை சந்திரசேகரம் | 1990/91 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 9 | பாலிப்போடி சபாரெத்தினம் | 1990/91 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 10 | கணபதிப்பிள்ளை குககுமாரராஜா | 1991/92 | கிழக்கு பல்கலைகழகம் | கணிதம் |
| 11 | வேல்முருகு சுரேஸ்குமார் | 2001/ 2002 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | கலை |
| 12 | பாக்கியராசா ஜெயராணி | 2002/ 2003 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 13 | முருகமூர்த்தி ஜெயக்குமார் | 2004/ 2005 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 14 | வேலாயுதம் நிசாந்தன். | 2005/ 2006 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 15 | கணேசன் மோகனதாஸ் | 2005/ 2006 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 16 | கனகரெத்தினம் சுதாகரன் | 2005/ 2006 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 17 | கணேசலிங்கம் கோகுலன் | 2008/ 2009 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | சித்தமருத்துவம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 18 | கேதாரம் நிசா | 2010/ 2011 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 19 | நாகராசா துஸ்யந்தன் | 2010/ 2011 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 20 | துரைராசாசிங்கம் கவேஸ்காந் | 2010/ 2011 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 21 | சச்சிதானந்தம் ஜயவாணி | 2011/ 2012 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 22 | செல்வகுமார் கிரிசாந்தகுமார் | 2011/ 2012 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 23 | ஸ்டிபன்சன் கியாணு | 2012/ 2013 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | கலை |
| 24 | யோகேஸ்வரன் குகதீசன் | 2013/ 2014 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 25 | சிவநாதன் ஜசிதா | 2013/ 2014 | கிழக்கு பல்கலைகழகம் | வைத்தியம் |
| 26 | சபானரெத்தினம் மார்க்கிறட்மேரி | 2014/ 2015 | தென்கிழக்கு பல்கலைகழகம் | நடனம் |
| 27 | செல்வராசா பாணுஜா | 2014/ 2015 | கிழக்கு பல்கலைகழகம் | ICT |
| 28 | புஷ்பராசா தனுசாயினி | 2014/ 2015 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 29 | கேதாரம் ருசானி | 2014/ 2015 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 30 | வேலாயுதம் டேவிதாசன் | 2014/ 2015 | கிழக்கு பல்கலைகழகம் | சித்திரம் |
| 31 | முருகமூர்த்தி கார்த்திகா | 2014/ 2015 | வவுனியா பல்கலைகழகம் | விஞ்ஞானம் |
| 32 | கருணாகரன் மதுக்சனா | 2016/ 2017 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 33 | முருகமூர்த்தி டயாணி | 2017/ 2018 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 34 | கோமேந்திரன் கோகுலவதனி | 2017/ 2018 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 35 | அமிர்தலிங்கம் விதுசினி | 2018/ 2019 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 36 | அரசரெத்தினம் டிலோசினி | 2018/ 2019 | கிழக்கு பல்கலைகழகம் | வர்த்தகம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 37 | இராசநாயகம் நிலோஜனா | 2018/ 2019 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 38 | தவராசா திவாகரன் | 2018/ 2019 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | சித்திரம் |
| 39 | ஸ்டிபன்சன் ஜீவலக்சனா | 2018/ 2019 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 40 | முருகமூர்த்தி கம்ஷாயினி | 2018/ 2019 | கிழக்கு பல்கலைகழகம் | விஞ்ஞானம் |
| 41 | பத்மநாதன் டிலக்சன் | 2018/ 2019 | பேராதனிய பல்கலைகழகம் | விஞ்ஞானம் |
| 42 | அருளானந்தம் அபிராமி | 2018/ 2019 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 43 | அற்புதம் ஜிலோஸ்கரன் | 2019/ 2020 | மொறட்டுவ | கணிதம் |
| 44 | மாணிக்கவாசகம் டனுஜா | 2019/ 2020 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | வர்த்தகம் |
| 45 | சரவணகுமார் சர்மிக்கா | 2019/ 2020 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | சங்கீதம் |
| 46 | பாக்கியராஜா மயூரவேல் | 2020/ 2021 | மொறட்டுவ | முகாமைத்துவம் |
| 47 | செல்வராசா பிரணீத்தா | 2020/ 2021 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | சட்டம் |
| 48 | தங்கவேல் புலோஜன் | 2020/ 2021 | வவுனியா | கலை |
| 49 | குணசிங்கராசா கிறோசன் | 2020/ 2021 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 50 | இராமலிங்கம் மதிவதனன் | 2020/ 2021 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 51 | பத்மநாதன் துசானிக்கா | 2020/ 2021 | சப்ரகமுவ பல்கலைகழகம் | விளையாட்டு கல்வி |
| 52 | கர்ணாகரன் டினோச்சனா | 2020/ 2021 | கிழக்கு பல்கலைகழகம் | கலை |
| 53 | அரியலிங்கம் கிருந்தா | 2020/ 2021 | யாழ்ப்பாணப் பல்கலைகழகம் | சங்கீதம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1985 -2021 வரை

### மாங்காடு வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களின் விபரம்

1. வயிரமுத்து கணபதிப்பிள்ளை
2. பொன்னம்பலம் துரைராசா
3. செபரெத்தினம் நித்தியகலா
4. கணபதிப்பிள்ளை முருகமூர்த்தி
5. இரத்தினசிங்கம் லூத் அனுசியா
6. செல்லையா நாராயனமூர்த்தி
7. பாலிப்போடி துரைராசசிங்கம்
8. எட்வின் ரணி
9. காசுபதி சச்சிதானந்தம்
10. பொன்னம்பலம் கோகிலவாணி
11. தாமோதரம் கோகுலராணி
12. வடிவேல் சிவசக்தி
13. ஜெயராஜ் சுதேஸ்கரன்
14. நவரெத்தினம் நளினிதேவி
15. மயில்வாகனம் கோமதமோகன்
16. மயில்வாகனம் இராசமோகன்
17. ஆறுமுகம் ஜெயரூபன்
18. செல்லத்துரை கோகுலசிங்கம்
19. யோகராசா சகுந்தலா
20. கந்தப்பெருமாள் தயாலெட்சுமி
21. கந்தப்பெருமாள் இதயவேணி
22. கனகசபை நந்தகுமாரி
23. இரத்தினசிங்கம் பரமேஸ்வரன்
24. அரசரெத்தினம் தர்சினி
25. இரத்தினசாமி நவமணி
26. கணேசன் ஜெயந்தி
27. பொன்னம்பலம் சசிகலா
28. பாலசுந்தரம் கமலேஸ்வரி
29. தர்மகுணராசா டிலோஜனி
30. குருகுல சிங்கம் டுமாலினி
31. வேலாயுதம் தட்சாயுதன்
32. சிவானந்தராசா சுலக்சனா
33. இரத்தினசாமி தமயந்தி
34. தியாகராசா ராதிகா
35. கிருஷ்ணபிள்ளை நிர்மலா
36. பொன்னம்பலம் மேகவண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு - 5

## பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்கள் விபரம்

1) க.வேல்முருகு (பரிசாரகர்))
2) பா. செபரெத்தினம் (மருந்து கலவையாளர்)
3) க.கந்தப்பெருமாள் (ஆசிரியர்)
4) S. தியாகராசா (பரிசாரகர்))
5) நாகமணி (கிராம உத்தியோகத்தர்)
6) ச. நடராசா ( முன்னாள் ஆலய தலைவர்)
7) க. முருகமூர்த்தி (ஆசிரியர்)
8) கி. பிரகலாதன்
9) திருமதி. ஆனந்தி பிரசாந்

## பழைய மாணவ சங்க செயலாளர்கள் விபரம்

1) க. குணசேகரம் (உதவிகல்வி பணிப்பாளர்)
2) பொ. மேகவண்ணன் (ஆசிரியர்)
3) மு. விஷ்ணுவர்த்தன்
4) ஜெ. சுதேஸ்கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

நன்றி

நூலாசிரியர் – செ.அருள்ராசா

சரவை பார்த்தவர் – க.குணசேகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பு - 6

## மாங்காடு கிராமத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் விபரம்

1. K.வேலாயுதம்
2. T.பூரணம்மா
3. வ.கணபதிப்பிள்ளை
4. தெ.பூபாலரெத்தினம்
5. செ.அருள்ராசா
6. அ.அன்னலெட்சுமி
7. க.சுந்தரலிங்கம்
8. க.குணசேகரம்
9. க.மகேந்திரன்
10. இ.ரவிச்சந்திரன்
11. க.குககுமாரராஜா
12. கா.சச்சிதானந்தம்
13. செ.நாராயணமூர்த்தி
14. செ.திருனேசராசா
15. திருமதி.இ.ஜெயக்காந்
16. திருமதி.கோ.கணேசமூர்த்தி
17. ம.கோமதமோகன்
18. திருமதி.ச.குணகேந்திரன்
19. இ.சூரியகுமார்
20. பே.சூரியகுமார்
21. செ.தியோகன்
22. த.றீகன்
23. இ.சிவகுமார்
24. செல்வி.இ.லூத்தனுசியா
25. பொ.மேகவண்ணன்
26. பொ.துரைராசா
27. திருமதி.கோ.ராஜ்குமார்
28. திருமதி.ஜெ.தினேஸ்வரன்
29. திருமதி.நி.குகனேசன்
30. திருமதி.ரூ.ஜெயரூபன்
31. திருமதி.பி.ஜெயரூபன்
32. திருமதி.பா.றீகன்
33. யோ.குகதீசன்
34. திரு.து.சஜீகாந்
35. திருமதி.ரு.முகுந்தமூர்த்தி
36. திருமதி.இ.தருமராஜா
37. ஆ.கருணாமூர்த்தி
38. திருமதி.சு.ரூபிதன்
39. அமரர்.இ.சிவயோகம்
40. அமரர்.கா.கங்கேஸ்வரி
41. அமரர்.ச.சத்தியப்பிரியா
42. திருமதி.நி.சிவநாதன்
43. மு.ஜெயக்குமார்
44. நா.தேவமயூரன்
45. த.இன்பராசா
46. பா.சபாரெத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் மற்றும் ஆசிரியர்கள்



**இருப்பவர்கள் இடமிருந்து வலம் 1ம் வரிசை**

திருமதி. யோ.ஜெயவரதராஜன், திருமதி.ராஜ்குமார், திருமதி.ரா.சஞ்சி, திருமதி.கோ.ராஜ்குமார், செல்வி.ச.நிலோஜனா, திருமதி.ஜீ.இளங்குமரன், திருமதி.ஜெ.உதயரமேஸ், திருமதி.கெ.டினேஸ்வரன், திருமதி.ச.கனேசமூர்த்தி, திருமதி.கு.சிவச்செல்வம்

**இருப்பவர்கள் இடமிருந்து வலம் 2ம் வரிசை இருப்பவர்கள்**

திருமதி.பு.பிரபாகரன், திருமதி.பு.கருணாநிதி, திரு.ஏ.சோதீஸ்வரன், திருமதி.த.குணசேகரம், திருமதி.க.ஜயந்தன், திருமதி.ல.சந்திரலிங்கம், திருமதி.த.ஜீவசிறி.

**இருப்பவர்கள் இடமிருந்து வலம் 3ம் வரிசை இருப்பவர்கள்**

திருமதி.ய.புவனகாந்தன், திருமதி.ச.குணலேந்திரன், திருமதி.கா.செல்ப்பிரசாத், திருமதி.நி.அஜந்தரூபன், திருமதி.க.நிமலநாதன், திருமதி.சி.சாதிகரீன், திருமதி.அ.இர்ஷாத், திருமதி.தே.விஷவஜிந்தன், திருமதி.வி.கிருபானந்தன், செல்வி.க.புவனேஸ்வரி, திருமதி.வ.சதானந்தன்

**இருப்பவர்கள் இடமிருந்து வலம் 4ம் வரிசை இருப்பவர்கள்**

திரு.அ.விமலேஸ்வரன், திரு. கி. லோகநாதன், திரு. ந.கமலநாதன், செல்வி. சி.கவிப்பிரியா, செல்வி.ஜான்சிமேரி, திருமதி. வி. ஜெயசுந்தரம், செல்வி. க.சிவரஞ்சனி, திரு. யோ.பர்மதாசன், திரு.மு.இராமேஸ்வரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவ தலைவர்கள்



ம.சார்மி, யோ.செவோனா, க. கிந்துஜா, ஜெ.டயானி, க. ஹிசோதரன், க. ஹம்சிகா, ம. பிரகர்சினி,
ச. விதுர்சிக்கா, ச.சகானியா, ச.யதுர்சனான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவர்கிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டெட், மட்டக்களப்பு. 065 2222607